பதிவு எண் M. 4000 16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி „ 2 0
வெளிநாடு „ ரூ. 9-0-0. „ 0-2-6.

மாலை 22 } ஈரோடு 16-4-1949 சனிக்கிழமை } மலர் 32.

20 ஆண்டுகளுக்கு முன் பெரியார்.

# மெட்டீரியலிஸம்.

★

## கடவுளும்—மதமும்.

சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்தபிறகு, அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்று செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு, மக்களுக்குள் தானாகவே ஒருவிதக் குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை நாம் நன்றாய் உணர்ந்துவருகின்றோம். அதோடு கூட பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களில், அரசியல் தேசியம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்க்கக் கடவுளையும், மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக்கொண்டும் விஷமப் பிரசாரம் செய்துவருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர், இவ் விஷமப் பிரசாரத்தைக் கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும், சமய சம்பந்தமாக மனத் துடிப்புக் கொள்வதாலும், நமது நிலையையும், கடவுள், மதம் என்பதுபற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாகக் கருதி இ

எழுதப் புகுந்தோம்.

களைப்பற்றி இதற்கு

பலதடவை பேசியும், எழுதியுமிருக்கின்றோம். ஆயினும் அவைகளைவிட இது சற்று தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின்மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவுசெய்து இதைச் சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். இந்த முதல் பகுதியானது இதே தலைப்பின் கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கி எழுதும்படி சொன்னதை ஆதரித்தும் எழுதப்பட்டதாகும.

### நமது கவலை?

முதலாவதாக, நமக்குக் கடவுளைப் பற்றியாவது, மதத்தைப்பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலையை உண்டாக்கவேண்டும் என்பதே முக்கிய கவலை என்பதாகவும் அநேக தடவைகளில் வெளியிட்டிருக்கின்றோம். அதுவும் பலர் நம்முடைய இம் முயற்சியில் கடவுளையும், மதத்தையும், கொண்டுவந்து குறுக்கே போட்டுவிட்டதால்தான் நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியதாயிற்றேயொழிய உண்மையில் கடவுளையும், மதத்தையும்பற்றிப் பேசவேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை. அதுபோலவேதான் சைவ சமயத்தைப் பற்றியும் நாம் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படியெனில் சில சைவத் தலைவர்கள் நமக்கு எதிராகத் தம்மால் கூடிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து பார்த்தும், ஒன்றிலும் பயன் பெறாததால் கடைசியாகச் சமயமென்றும், சமயப்பெரியாரென்றும் கூறிக்கொண்டு அவ்வார்த்தைகளையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில வைத்தியக்காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக்கொண்டு,

> மெட்டீரியலிஸம் [உலோகாயதம்] என்ற தலைப்பில் பெரியார் அவர்கள் **20** ஆண்டுகளுக்குமுன் பல இடங்களில் பேசியதும், எழுதியதும் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது. அறிவுக்கு விருந்தான இதனை ஒவ்வொருவரும் அவசியம் உட்கொள்ளவேண்டும். இந் தலைப்பில் தொடர்ந்து வரும்.
>
> [ஆ—ர்]

அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப்படுத்திவிட்டுச் சூழ்ச்சிப்போர் தொடுக்க ஆரம்பித்ததின் பலனாய், சைவசமயம் என்பதும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் சந்தித்து வரவேண்டியவர்களானதோடு சைவப் பெரியார்கள் என்பவர்களின் சாயமும் வெளுக்க வேண்டியதாய் விட்டது.

## என்ன? எப்படி? எதனால்?

இன்றையத்தினம் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும், சமயப்பற்றும் கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்தீகர்கள்—சமயத் துரோகிகளெனவும் தீர்மானிக்கப்பட்டு, அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப்பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள், மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயிற்று என்பதுபற்றியும், இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது அறியாமையினாலுண்டாக்கினார்களா? என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது—அதாவது மக்கள்—கடமை என்ன என்பது பற்றியும் சற்று ஆலோசித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதைப்பற்றி முதலாவதாக இங்கு குணம், உருவம், பெயர் அற்ற தன்மைகளையுடைய கடவுள் என்பதைப்பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப்பற்றியுமே இங்கு விவரிக்கக்கருதியுள்ளோமே தவிர, மற்றப்படி பல கடவுள்களின் தன்மையையும், மதப்பிரிவுகளான கிறிஸ்தவ, இஸ்லாமிய, ஜைன, பௌத்த, சீக்கிய, சைவ, வைணவ, ஸ்மார்த்த, சாக்கிய, வாமமுதலிய பல உள் மதங்களைப்பற்றியும் நாம் இங்கு தனித்தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்துவார்த்தம் என்கின்றதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமேதான், ஒவ்வொருவரும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியர்களையோ காப்பாற்றிக்கொள்ள முடிந்ததேயொழிய அறிவின் மீதோ, நியாயத்தின்மீதோ, நிலை நிறுத்த முடியாமற்போய்விட்ட விஷயம் உலகமறிந்ததாகும். ஆதலால் இப்பகுதியில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

## சக்தி என்பது எது?

முதலாவது மக்களுக்குக் கடவுள் எப்பொழுது? எப்படி ஏற்பட்டது? என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்கவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் இப்போதுகூட மக்களுக்குப் பிறர் சொல்லிக் கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற அச்சம், நினைப்புமேற்படுகின்றதே தவிர தானாக ஏற்படுவதில்லை. எப்படியெனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி சாமி என்றும், அதைக்கைகூப்பிக் கும்பிடு என்றும் சொல்லிக்கொடுத்த பிறகே: குழந்தை சாமியைக் கும்பிட அறிகின்றது. அதுபோல, ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனதிற்குக் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்கவேண்டும். அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால் சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில்தான் கடவுள் நினைப்புத்தோன்றி இருக்கவேண்டும். கடவுள் என்பது—கடவுள், ஸ்வாமி, அல்லா, காட் என்ற தமிழ், சமஸ்கிருதம்; அரபி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும், குறியில் — அர்த்த[illegible]ல் உலகத்தோற்றத்திற்கும், [illegible]கும், அழிவிற்கும் கா[illegible] ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால், அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூதக்கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும், ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதுவும், அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன், அல்லா, காட் என்று சொல்லப்படுகின்றதென்று சொல்வதானாலும், அந்தசக்தியென்னும்கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத் தக்கதாயிருக்கின்றது. ஆகவே அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம்நாட்டைப் பொறுத்தவரை எப்படியிருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணர முடியும். அதாவது இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எவையென்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், பயங்கரமான மிருகங்கள் ஆகியவைகளெல்லாம் கடவுளாகக் கருதப்படுகின்றன. இவைகளெல்லாம், இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக்கொள்ளப்பட்டவைகள். அதிலும் இமயமலையே கைலையங்கிரியாகவும், அதுவும் வெள்ளிமலையாகவும், அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம்மலையிலுள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும், கருதப்பட்டதோடு, இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டு பிடிக்க முடியாதிருந்ததும், மேல்நாட்டை மேல் லோகமென்றும், கீழ்நாட்டை பாதாள லோகம், நாகலோகம் என்றும், இப்படிப்பலவாறாகக் கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணமென்னவென்று பார்க்கும்போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவைகளைக் கடவுளென்றும், அவற்றின் இயங்குதலைக்கடவுள் சக்தி என்றும் சொல்லவேண்டிய [illegible]யம் தானாகவே ஏற்பட்டது.

([illegible]ர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

[உரிமை ஆசிரியருக்கே]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தைக்கு மேல் அவர்க்கு வேலையின்மையால் காடுகளில் ஆடு மாடுகள் மேய்த்துக் கொண்டும், வேண்டிய மரங்கள் வெட்டிக் கொண்டும், சிலர் பாடியமைத்துக் கொண்டு வெயிற்கால முழுவதையும் அக்காட்டிலேயே கழிப்பர். இன்று அதிகாரிகளும், சில செல்வரும் மலைவாழ்க்கை செய்வது போலன்றிச் செல்வரும் எளியருமாகிய எல்லோரும் அன்று ஒருங்கு மலைவாழ்க்கை செய்து வந்தனர். இதையே புனைந்துரை வகையால் ஓர் அரசினைத் தலைவனாகக் கொண்டோ, அல்லது காதலர்களைச் சிறப்பித்தோ புனல் விளையாட்டு, மலை விளையாட்டு, பூக்கொய்தல், உண்டாட்டு முதலியனவாகக் கடைச்சங்க நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. வெயிற்கால முடிந்ததும் ஊர்க்கு வந்து பழையபடி தொழில் செய்யத் தொடங்குவர். இக்காடுறை காலத்தே வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பர்.

**4. காதற் கலப்பு:** இவ்வாறு ஊர்களின் இடையிடையே உள்ள காடு, மலைகளில் வெயிற் காலத்தை விளையாட்டாய்ப் பயன்படுத்தி வரும்போது, ஒத்த பருவ முதலியனவுள்ள காளையருங் கன்னியரும் கருவொன்றுபடத் தோன்றும் காதலால், தூண்டப்பட்டுத் தத்தமக் கேற்றத் துணைவர்களை நாடுவர். (கள2) அவ்வாறு நாடி வருகையில், உருவ முதலியன ஒத்து ஒருமனப்பட்ட ஒருவனும் ஒருத்தியும் குறிப்பால் தத்தம் காதலை வெளியிடுவர் (கள3) நாளடைவில் காதல் முதிர்ச்சியால் பிறர்க்குத் தெரியும்படியும் நடந்து கொள்வர். இதனையறிந்த தோழர்களும் தோழியரும் அவர் பெற்றோரிடம் சொல்லுவர்.

விருவர் பெற்றோரும் கலந்
மணமுடிப்பர்.

இவ்வாறு அவர் காதல் கலப்புற்று வரும்போது சிலர் தம் தோழர்களிடம் தங்கருத்தைத் தெரிவிப்பர். சிலர் தங்காதலியிடம் நெருங்கிப் பழகும் பெண்களிடம் கூறுவர். சில பெண்கள் தம் தோழியரின் குறிப்பு வேறுபாட்டைக் குறிப்பாலுணர்ந்து அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வர். சிலர் தம் தோழியரிடம் தாங் கொண்ட காதலை அறிவிப்பர். சிலர் தம் பாட்டியரிடம் தெரிவிப்பர். இன்றுபோல் அன்று இக் காதல் முறை பழிக்கப்படாமல் போற்றப்பட்டு வந்ததால் பெற்றோர்கள் மனமுவந்து அக்காதலர்க்கே மணமுடித்து வந்தனர். உண்மைக் காதல் உண்டாவதற்கும் இடம் இருந்தது.

சிலர் வேனிற்காலத்தில் இவ்வாறு இரண்டொரு முறை எதிர்ப்பட்டுக் காதல் அரும்பவே, மழைக் காலம் வரவே ஊர் வந்தபின் நாற்று நடல், களைகளைதல், ஆடு மாடு மேய்த்தல் முதலிய தொழில்களில் ஈடுபடும்போது எதிர்ப்பட்டுக் காதல் முதிர்வர். 'கம்புக்குக் களை வெட்டக் கூப்பிட்டுத் தம்பிக்குப் பெண் பார்த்ததுபோல' என்னும் பழமொழி இதனை வலியுறுத்தும். இன்னும் நிலா வெளிச்சத்தில் விளையாடும்போதும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர். பின்னும் சிலர் ஓரூரினரானதாலும், சுற்ற முறையாலும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர். இங்ஙனம் பல்வகையாலும் ஒருவரையொருவர் காதலித்துக் காதல் முதிர்ந்து, பெற்றோரின் உடன்பாடு பெற்று மணஞ் செய்து கொண்டு இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு காதல் கொண்ட காதலர் இருவர்க்கும் மணஞ்செய்யாமல் பெற்றோர் வேறொரு [illegible] மணம் பேசினாலோ, பிறர் [illegible]ர் கலப்பைத் தடுத்தாலோ [illegible] வேண்டுகோளால் காதலன் அவளை ஒருவருமறியாமல் தன்னூர்க்கு அழைத்துச் செல்லுதலும், பெண்ணைக் காணாத சுற்றத்தார் தேடிச் சென்று வழியில் காணுதலும், சுற்றத்தாரைக் கண்ட அப்பெண் அவர்களிடம் செல்லாமல் தன் காதலனை அணைந்து நிற்கக்கண்ட சுற்றத்தார் 'சரி தொலைந்து போ' என ஒருவாறு உள்ளிசைந்து வெளி வெறுப்பினராய் விட்டுச் செல்ல, இருவரும் அவனூர் சென்று மணந்து கொண்டு வாழ்தலும், பெண்ணின் காதற்கலப்பைக் கண்ட சுற்றத்தார் இருவரையும் அழைத்து வந்து மணமுடிப்பதும் உண்டு. இன்றும் ஒருவன் கூட்டிப்போன (ஒருவன் கூடப்போன) பெண்ணை அவனிடமே வாழ விட்டுப் பெற்றோர்கள் அடிக்கடி போய்ப் பார்த்து வருவதும்; இருவரையும் அழைத்து வந்து தம்மூரிலேயே வைத்துக் கொள்வதும் உண்டு.

மேலும், இருவர் கொண்ட காதலொழுக்கம் வெளிப்படா முன் (பிறரறியாமுன்) பெண்ணின் காமக் குறிப்பறிந்த பெற்றோர், தம் பெண் வாழ்க்கைத் துணைவனை நாடினாளென எண்ணி, ஒத்த பருவ முதலியனவுள்ள வேறொருவனுக்கு மணம் பேச, அதையறிந்த அப்பெண் தனது பாட்டி மூலமாவது, வேறு பெண்கள் மூலமாவது தனது கருத்தைத் தெரிவிப்பாள். உடனே பெற்றோர் அவள் காதல் கொண்டவனுக்கே மண முடிப்பர்.

சில பெண்கள் நாணமிகுதியால் தங்கருத்தைவெளியிடாமல் காமத்தால் உடல் வாடி வெறி பிடித்தவர் போல் வருந்துவர். அதுகண்ட பெற்றோர் அதன்காரணமறியாது மயங்கிக் குறத்தியிடம் குறிகேட்டும், வெறியாட்டாளனை (பூசாரி) வினாவியும் வருந்துவர். இவ்வாறு செய்யும் போது அப்பெண்ணின்

தோழியர் அவள் பெற்றோரிடம் உற்றதை உரைத்து அவள் காதலனுக்கே மணமுடிப்பர். இது இப்போது பேய் பிடித்ததென்று, பேயோட்டலைப் போன்ற வழக்கமாகும். அச்சமும், அவாவும் மிகுந்தால் உடல் நலிவு, மனக் கலக்கம், வெறி முதலியன உண்டாகுமென்பது உளநூற் கொள்கை.

இவ்வாறு நடக்கும் காதற்கலப்பில் பெரும்பாலும் உள்ளப்புணர்ச்சியே நிகழும். அதாவது, ஒருவரை யொருவர் மனத்தாலே காதலித்துப் பேசிவருவர். செல்வர், வறுமை, உயர்வு, தாழ்வு, சொந்தம், அயல், சேய்மை, அண்மை கருதாது, ஒத்த பருவ முதலியனவுள்ள ஆண்பாலைப்பெண்பாலும், பெண்பாலை ஆண்பாலும் விரும்புதல் மக்கட்பிறப்பிற்கேயன்று, மற்றையுயிர்கட்கும் இயற்கையாகலானும், மணம் என்னும் சொல்லுக்கு 'கூட்டம்' என்பதே பொருளாகலானும், தத்தம் வாழ்க்கைக்கு வேண்டிய துணைவர்களைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையைத் தாங்களே நடத்தியின்புறுதல் அவரவர் கடமையாகலானும் மெய்யுறு புணர்ச்சி நடக்கினும் குற்றமில்லை. காதலர் பின் பிரியாமையும், பிரியின் அவர் வாழ்க்கையே பயன்படாமையும் இதற்குத் துணை செய்யும்.

இங்ஙனம் காதல் மணஞ்செய்து கொண்டவர், நெடுநாளாய் உள்ளத்தூறிய காதல் வெள்ளம் கரைபுரள, ஈருடல் ஓருயிராய் ஊடியும் கூடியும் இன்புற்று, இருவரும் வாழ்க்கையின் இன்றியமையா உறுப்புக்கள் என்பதை யுணர்ந்து இணைபிரியாமல் வாழ்வர். அதன்பின் அவர்தம் வாழ்க்கையின் போக்கையே கருதுவதல்லது வேறொன்றையும் நோக்கார். ஏன்? உருக்கியபொன்னேபோல் 'நான் நீ' என்னும் வேறுபாடின்றி ஒருமைப் பாடுற்றனர்.

இன்றும், வெவ்வேறு குலத்து ஆணும் பெண்ணும் மணத்தின் முன்னோ, பின்னோ காதல் கொண்டு ஒன்று கூடிக் கிழப்பருவ முற்றும் இருவரும் இணையாமல் வாழ்ந்து வருவதும் இதனை வலியுறுத்தும். பருவகாலத்துண்டான காதலானது, இருவருடைய உள்ளத்தையும் ஒன்றாகப்பிணைத்துத் தான் பிரியினும் அவர் பிரியாமல் இருக்குமாறு செய்கிறது. இவ்வாறு ஒரு மனைப்பட்டவர் இவ்வுலகில் ஒருவரை விட்டொருவர் இறக்கநேரின், அத்துடன் தன் வாழ்க்கை நலத்தைத் துறந்து அரையுருவாய்த் துறவுவாழ்க்கை நடத்திவருவர். இது ஆண் பெண் இரு பாலார்க்கும் பொதுவாகும். இதை, காதலி இழந்த தபுதார நிலை, காதலன் இழந்த தாபதநிலை (புறத் 24) என்பர் ஆசிரியர். மனைவி இறந்தபின் பாரி என்னும் வள்ளல் இரண்டாவது மணம் செய்து கொள்ளாமல் தபுதார நிலையிலேயே இருந்து வந்தனன்.

உண்மைக் காதற்கலப்புற்று மணந்து கொண்ட பெண்களில் சிலர், ஒரு மனைப்பட்ட கணவனிறக்கின் உடனுயிர் விடுவர்; சிலர் உடன் கட்டையேறுவர்; சிலர் தாபத நோன்பு (விதவை) நோற்பர். இவை முறையே தலையன்பு, இடையன்பு, கடையன்பு படும். தமிழ்த் தலை[illegible] இராவணன் இறந்ததும் அவன் கோப்பெருந்தேவியான வண்டார் குழலி என்னும் தமிழரசி உடனுயிர்விட்டது தலையன்பிற்கு எடுத்துக் காட்டாகும். பூதப் பாண்டியன் இறந்ததும் அவன் பெருந்தேவியார் யார்தடுத்தும் கேளாமல் உடன் கட்டையேறியது இடையன்பிற்கு எடுத்துக் காட்டாகும். ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன்வரை தமிழ் நாட்டுப் பழந்தமிழ்ப் பெண்டிர் களிடை உடன் கட்டை யேறும் வழக்கம் இருந்து வந்தது. (பழந்தமிழர்—ஆதிதிராவிடர்) பெரும்பாலான பெண்கள் உடன்கட்டையேறி வந்தனர். கோயில் கட்டி அவர்களைக் கும்பிட்டு வந்தனர். பழந்தமிழர் சேரியிலிருக்கும் 'வீரமாத்தி' கோயில்கள்—'வீரமாபத்தினி' கோயில்களேயாகும். கடையன்பாகிய தாபத நோன்பு நோற்றலைமேவோர் கணக்கற்றவர் பாவம்!

இவ்வாறு காதற்கலப்புற்று மணஞ்செய்து கொண்டு இல்லறம் நடத்திவந்த உலக வழக்கினையே செய்யுள் வழக்கிற் பாடுதற்கேற்ப, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என நிலத்தை ஐந்தாகவும்; புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஒழுக்கத்தை ஐந்தாகவும் பகுத்தும்; அவ்வொழுக்கத்தையே களவு, கற்பு என இருவகையாகவும், ஒவ்வொன்றையும் பல கிளவித் துறைகளாகவும் வகுத்தும்; தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, செவிலி, நற்றாய், தன்னை, தந்தை, வாயில், கூற்று, கேட்போர் என மக்களைப் பலபடியாகத் தொகுத்தும், கற்பனை பல புனைந்து இலக்கணம் செய்தனர் ஆசிரியர் தொல்காப்பியர்.

புறப்பொருள்: புறத்திணை அல்லது புறவொழுக்கம் என்பது, பழந்தமிழ் மக்களின் உலக வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாகும். இதனைப் பின்னர்க் கூறுவாம்.

## எங்கும் இலக்கிய முழக்கம்!

தமிழ்ப் பேராசிரியர் தோழர் இலக்குவனார் அவர்கள் கீழ்க்கண்டவாறு இக்கோடை விடுமுறையில் சுற்றுப் பிரயாணம் செய்து சொற்பொழிவாற்றுவார்.

| | |
|---|---|
| 17—4—49 | தென்மாப்பட்டு. |
| 19—4—49 | சிவகெங்கை. |
| 21—4—49 | அ. சிறுவயல். |
| 22—4—49 | தஞ்சை. |
| 23—4—49 | நீடாமங்கலம். |
| 24—4—49 | மன்னார்குடி. |
| 25—4—49 | வேட்டைக்காரனிருப்பு (தஞ்சை மாவட்டம்) |
| 26—4—49 | திருவாரூர். |
| 27—4—49 | குடவாசல். |
| 28—4—49 | கும்பகோணம். |
| 29—4—49 | மாயவரம். |
| 30—4—49 | பெருந்தோட்டம் (சீர்காழி) |
| 1—5—49 | புதுச்சேரி. |
| 3—5—49 முதல் 10—5—49 முடிய | வட ஆற்காடு மாவட்டம். |
| 12—5—49 | திருச்சிராப்பள்ளி (வானொலிப்பேச்சு—2-16 மதியம்) |
| 14—5—49 முதல் 19—5—49 முடிய | வட ஆர்காடு மாவட்டம். |
| 21—5—49 | பெங்களூர். |
| 25—5—49 | கோபிச்செட்டி பாளையம். |
| 27—5—49 | வெள்ளனூர் (கோவை மாவட்டம்) |
| 29—5—49 | சென்னை. |

## பாராட்டுக் கூட்டம்.

மாயவரம் 11-4-49

இவ்வூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்துவந்த தோழர் தண்டபாணி அவர்கள் திருவாரூர் மாற்றப் பட்டுவிட்டதால், கடந்த 8-4-49-ல் அவருக்கு தேனீர் விருந்தும் எஸ். [illegible]ாமி தலைமையில் பாராட்டுக் [illegible]ம் நடத்தப்பட்டது.

# உண்மை உயர்ந்தோங்கும்!

உண்மையை, எந்தக் காலத்திலும் மக்கள் தொடக்கத்தில் உவந்து ஏற்றுக் கொள்வதில்லை. உயிரை உதவி வழியும் உமட்டலை எழுப்பக்கூடிய கசப்பு மருந்தாகவே அதைக் கருதுவார்கள். காலம் சில கடந்த பின்னரே, மக்கள் உண்மையை உணர்வார்கள். இது உலகம் கண்டறிந்த அனுபவஉண்மை.

பேரறிஞர் டார்வின் 'உயிர் வகைகளின் தோற்றம்' என்னும் அரியதொரு நூலைவெளியிட்ட காலத்தில், மதசாஸ்திரப் பண்டிதர்களும், உயிர் நூல் வல்லாரும் ஒரு முகமாக அதை எதிர்த்தனர். 'கூடாது இந்த நூல்' என்று கூக்குரலிட்டனர். அறிஞர் கொண்ட கருத்துக்கு எங்கு நோக்கினும் எதிர்ப்பு. எதிர்ப்பாளர்களிடையே கோபமாகிய அனல் மூண்டு எரிந்ததேயொழிய, அறிவாகிய ஒளி அதிகமாகப் பிரகாசிக்கவில்லை. உயிர் வகைகள் எங்ஙனம் உண்டாயினவென்று, அறிஞர் எடுத்துக் காட்டிய உண்மைகளை ஆராய்ந்து மறுக்கவியலாமல், அசடு வழிய, ஆகாது இந்த நூல் என்று அலறினார்கள் ஆணவங் கொண்ட மக்கள். கற்றறிந்த கார்லைல் போன்றவர்கள்கூட டார்வின் சித்தாந்தத்தை அங்கீகரிக்க மறுத்தனர். ஆனால் இப்பொழுதோ, விஞ்ஞானம் டார்வின் சித்தாந்தத்தை இறுகத் தழுவிப் பற்றிக்கொண்டது. சகலவித சாஸ்திரங்களும் டார்வின் சித்தாந்தத்தை ஒப்புக் கொள்ளுகின்றன. இகழினும், பழிக்கினும், எதிர்க்கினும் உண்மை உயர்ந்தோங்குமென்பதை இது உணர்த்துகிறதல்லவா! இன்னும் கூற வேண்டுமானால், பூமி உருண்டை வடிவமானது என்று கலிலியோ கூறிய காலத்தில் அவர் உதைதான் பட்டார். ஆனால் இன்றோ நம் அண்டைவீட்டுச் சிறுவன்கூட பூமி உருண்டைவடிவமானதுதான் என்று சொல்லும் நிலை ஏற்பட்டு விட்டது.

நமது நாட்டைப் பொறுத்தமட்டில், உண்மையின் உயர்வு எவ்வளவு தூரம் நிதர்சனமாகி வருகிறது என்பதை இனிக் காண்போம். திராவிடத் தந்தை பெரியார் இராமசாமி, "இந்த நாட்டுப் பெருங்குடி மக்கள் குருட்டு நம்பிக்கைகளில் கட்டுண்டு கிடக்கின்றனர்; மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கிக்கிடக்கின்றனர்; கபோதித்தனமான—மைத்தனமான கடவுள் வழிமைக் கொண்டொழுகுகின்றன விழிந்த தன்மைகளெல்லா நாம் முன்னேற வேண்டாமா" என்று கேட்ட காலத்திலும் "நம்மை அநாகரீகமுடையவர்களாக்கிய ஆரியமதம் இன்னும் நம்மவர்களை ஆட்டிக் கொண்டுதானிருக்கிறது; திராவிடத்தில்இன்றும் அது ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதானிருக்கிறது. எனவே இவ்வாரியத்தைத் திராவிடத்தைவிட்டு விரட்டியடிக்க வேண்டாமா" என்று வெந்தமனதோடு வேண்டிக் கொண்ட காலத்திலும், பகுத்தறிவாளர் இராமசாமி பெற்ற பட்டங்களும், பரிசுகளும் பலப் பல. எடுத்தியம்ப இயலாத அளவிற்கு எண்ணிறந்தன. ஈரோட்டுபீரங்கியின்முழக்கத்தைக் கேட்டு அக்கிரகாரம் ஆர்ப்பரித்தது. 'வந்ததே ஆபத்து' என்று வைதீகக் குடுக்கைகள் வடித்தன கண்ணீர். 'அய்யோ' ஆண்டவனுக்கு ஆபத்து! மதத்திற்கு ஆபத்து!' என்று அலறினர் ஆரிய அடிவருடிகள். நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய நாயக்கர்' என்று நாக்கில் நரம்பின்றித் திட்டியது ஒரு நயவஞ்சக நரிக்கூட்டம். பெரியாரை 'மதத்துரோகி' என்று சபித்தனர் மடாதிபதிகள். 'வகுப்புத் துவேஷி' என்ற வறட்டுக் கூச்சலைக் கிளப்பினர் சில அறிவிலிகள். இவை போன்ற சொல்லடிகளுக்கிடையே பிரசாரத்திற்குச்செல்லுமிடங்களில் பெரியார பட்ட கல்லடிகளும், சாணியடிகளுமே அவர் பெற்ற பரிசுகளாகும்.

"திராவிடர்களாகிய நாம் ஒரு தனி இனம். ஆங்கிலேயன் இந்திய உப கண்டத்திற்குள் நுழையும் வரை நம்மை நாமே ஆண்டு கொண்டிருந்தோம். இயற்கையில் பல நாடுகளாகப் பிரிந்திருந்த இந்திய உபகண்டத்தை, ஆங்கிலேயன் துப்பாக்கிமுனையில் ஒன்று படுத்தினான். திராவிட நாடு வடநாட்டுத் தேர்க்காலில் கட்டுண்டபின், வளம் பொருந்திய நம் நாட்டை, வடநாட்டார் சுரண்டிக் கொழுத்து வருகின்றனர். எனவே திராவிட நாட்டுப் பிரிவினை இன்றியமையாதது."

என்கிற இவ்வரிய உண்மையை அடிப்படையாக வைத்துக் கொண்டு பெரியார் இராமசாமி 1938ல் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற சங்கநாதத்தை எழுப்பினார். இதைக் கண்டு 'பாரதமாதாவைக் கூறு போடுவதா' என்று மனம் பதறினர் சில [illegible]லிகள். 'குறுகிய மனப் [illegible] என்று குறை கூறினர் சில [illegible]ர்கள். 'எலிவளை எலி [illegible]ன ஏளனக்குரலெழுப்பி எள்ளி நகையாடினர் சிலர். 'என்ன இருந்தாலும், நாட்டைத் துண்டாடுவது நாசகரமானதாகும்.' என்று அங்கலாய்த்துக் கொண்டனர் சிலர்.

இத்தனையும் நமது இயக்கத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள். இன்னும் தெளிவாகக்கூறவேண்டுமானால், உண்மையை மறைக்க எழுந்த சதிகள். அன்று நமது ஒப்பற்ற தலைவர் பெரியார் இராமசாமி வெளியிட்ட உண்மைகளை, மக்கள் இன்று ஓரளவிற்கு உணர்ந்து விட்டனர். ஏன்? எதிர்முகாமில் நிற்கும் சில தோழர்களே ஏற்றுக்கொள்கின்றனர். இந்த ஒப்புக்கொள்ளும் படலத்தைப் பார்ப்போம்.

ஒரு சிறு கும்பல் மதத்தின் பேரால் மக்களைச் சுரண்டி வாழ்வதையும், ஆண்டவன் பேரால் அவர்கள் நடத்தும் அட்டூழியங்களையும் அன்றே நமது பெரியார் அம்பலப்படுத்தினார். ஆனால் இன்று, அனல் கக்கும் நடையில் 'ஆண்டவன் பேரால் அழிகிறதே பலகோடி' என்று 'புரட்சி' இதழில் 'பூபதி' போன்ற எழுத்தாளர்கள் எழுதி அங்கலாய்த்துக் கொள்ளுமளவிற்கு உண்மை விளக்கம் பெற்றுவிட்டது.

ஆரியர்கள் அன்னியர்கள்; அவர்கள் வரவால் நமது தமிழ்ப் பண்பாடு, கலாசாரம் கெட்டுவிட்டன' என்று நாம் அன்று கூறிய காலத்தில், நாம் ஏதோ குரோத மனப்பான்மையுடன் ஒரு வகுப்பாரைக்குற்றஞ் சாட்டுகிறோம் என்று குறை கூறினர் பலர். தோழர் முத்துராமலிங்கத்தைக் கௌரவ ஆசிரியராகக்கொண்ட 'நேதாஜி' இதழ், நாம் அன்று கூறிய உண்மையை இன்று ஒப்புக்கொள்ளுகிறது. 23—1—49ல் வெளிவந்த முதல் 'நேதாஜி' தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதைக் கீழேபாருங்கள்.

"ஆதி மனிதன்-தமிழன்; ஆதிமொழி—தமிழ்; அதிக புத்திசாலி தமிழன். எனவே அகிலம் முழுமைக்கும் அறிவுச்சுடர் தந்து, ஒப்புயர்வற்ற உன்னதமானஜனநாயகசமத்துவசமுதாயத்தை உருவாக்கவேண்டியவன்—கூடியவன் தமிழன் ஒருவனே என்பதை எடுத்துக் காட்டி, தமிழனின் தனிப்பெருமையை நிலை நாட்டுவதே நமது நோக்கமாகும்."

உலகிலுள்ள எல்லா நாடுகளுக்குமே வழிகாட்டியாயிருந்து, இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்குப் பிறகு என்னென்ன முன்னேற்றங்களை விஞ்ஞான விற்பன்னர்கள் சாதிக்க முடியுமோ, அவற்றையெல்லாம் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் சாதித்திருக்க வேண்டும். ஆனால் இன்றுள்ள இந்தியாவோ எனில், சின்னஞ் சிறிய அற்ப அறிவுள்ள நாடுகளெல்லாம் கண்டு நகைக்க

...கும் வண்ணம் காட்டுமிராண்டிக்காலத்திற்கும் முந்திய பிற்போக்கு நாடாய் இருந்து வருகிறது. இதற்கு அன்னியன், அதாவது ஆங்கிலேயன் ஆட்சி மட்டும் அல்ல காரணம்.

வெள்ளையன் வருவதற்கு முன்பே இந்தியாவைத் தாயகமாகக் கொண்டு வயிறு வளர்க்க வந்த சில சுயநலக் கூட்டத்தாரும் இதற்கு பொறுப்பாளர். மக்களின் அறிவு தங்கு தடையின்றி வளர்ந்தோங்குமாயின், தாங்களும் தங்கள் சந்ததியாரும், நகத்திலழுக்கேறாமல் போக போக்கியங்களை அனுபவிப்பதற்கு இயலாது என்பதறிந்த அச்சுயநலத் துஷ்டர்கள், மூடப்பழக்க வழக்கங்களை எப்படியோ நாட்டில் நிலை நாட்டிவிட்டனர். ஆதிஇந்தியர் இப்பொல்லாக் கொள்கைக்கு இரையாகாது, நெறி தவறாது, தமிழர் பண்பாட்டைப் பாதுகாத்திருப்பார்களேயானால், நம்நாடு எக்காரணத்தைக் கொண்டும் நலிவுற்றிருக்காது.''

வகுப்புத் துவேஷத்தை வளர்த்தவர்கள்—வளர்ப்பவர்கள் பார்ப்பனர்கள்தான் என்று நாம் கூறிய காலங்களில் மக்கள் நம்பினார்களில்லை. ஆனால் சட்டசபையில் கடந்த சில காலமாகவே நடந்துவரும் நடவடிக்கைகள், நாம் சொன்ன உண்மைகளை மக்கள் ஒப்புக்கொள்ளும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன. தோழர்கள் இராமசாமி ரெட்டியாரும் பிரகாசம் காருவும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டகாலத்தில், தேர்தலன்று, தேர்தல் ஸ்தலத்தில் என். எஸ். வரதாச்சாரி என்ற ஒரு பார்ப்பனர் மற்றொரு பார்ப்பனரைப் பார்த்து, அவர் எங்கு ரெட்டியாருக்கு ஓட்டு செய்துவிடுவாரோ என்று கருதி ''டேய் நீ பிராமணனுக்குப் பிறந்தவனாக இருந்தால் பிராமணனுக்கே ஓட்டுச் செய்யவேண்டும்'' என்றுசொன்னதையும், அப்பொழுது அருகிலிருந்த ஒரு பார்ப்பனரல்லாத காங்கரஸ்காரர் ஒருவர் ''இப்படியெல்லாம் நீங்கள் நடந்துகொள்வதைப் பார்த்தால் இன்னமும் ஒரு டஜன் ராமசாமி வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது'' என்று கூறியதையும், மக்கள் அறிந்துகொள்ளாமலில்லை. எந்தப் பார்ப்பனக் கும்பல், தன் நலன்கருதி ஜமீன்இனாம் ஒழிப்பு மசோதாவை எதிர்த்ததோ, அதே சுயநலக் கும்பல்தான் அறநிலையப் பாதுகாப்பு மசோதாவையும் அன்று எதிர்த்தது என்பதையும் மக்கள் தெரிந்துகொண்டுதானிருக்கிறார்கள். இந்த நாட்டில் வகுப்புத் துவேஷத்தை வளர்த்தது பார்ப்பனர்கள்தான் என்று பட்டவர்த்தனமாகசட்டசபையில் காங்கரஸ் மந்திரி கோபால் ரெட்டி கூறுமளவிற்கு உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டனர். ஆரியர்கள் இன்னும் இந்நாட்டில் ஆதிக்கம் செலுத்திவருகின்றார்கள் என்று நாம் கூறினால், அது அர்த்தமற்ற பேச்சு என்று உதறித்தள்ளப்படும். ஆனால் அமைச்சர் கோபால் ரெட்டி காங்கரஸ்காரராயிற்றே! அவர் கூற்றும் பொய்யாகவாயிருக்கும். நூற்றுக்கு மூன்றுபேர்களாக இருக்கும் பார்ப்பனர்களுக்கு, மூன்று உத்தியோகங்கள் அளிக்கப்படுவதுதான் முறை. ஆனால் விகிதாச்சாரத்திற்கு அதிகமாக பார்ப்பனர்களுக்கு உத்தியோகங்கள் அளிக்கப்பட்டிருக்கிறதென்று அமைச்சர் கோபால் ரெட்டி சட்டசபையில் கூறி, நாம் கூறிய—கூறுகிற உண்மையை ஒப்புக்கொண்டு இருக்கிறார்.

திராவிடநாடு தனி நாடாகவேண்டுமென்று நாம் கூறிய காலத்தில் 'பாரத மாதாவைக் கூறுபோடுவதா' என்று பதறித் துடித்த தோழர்கள், இன்று பாக்கிஸ்தான் பிரிந்து தனி நாடாகத் திகழ்வதைக் கண்டு வாயடைத்து வாளாவிருக்கின்றனர். பர்மாவில் கரேனியர்கள் வற்புறுத்தும் பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளும்படி பர்மிய சர்க்காருக்கு இந்திய சர்க்கார் யோசனை கூறுவதைக் கண்டு வெட்கப்படுகின்றனர், முன்பு பிரிவினை கூடாது என்று புலம்பிய தோழர்கள். ''தமிழனுடைய உரிமையை வடநாட்டான் பறிமுதல் செய்து தமிழனைத் தன் அடிமையாகக்கொண்டிருக்கிறான்; எனவே தமிழன் தனி அரசு அமைக்கவேண்டியது அதி முக்கியமானதாகும்'' என்று காங்கரஸ் தோழர் சிவஞான கிராமணியாரே கூறுகிறார். இதுமட்டுமல்ல, ''மத்திய சர்க்கார், சென்னை சர்க்கார்பால் காட்டும் ஓர வஞ்சனை திராவிடக் கழகத்தார் கோரும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை வலுப்படுத்துகிறதல்லவா?'' என்று சட்டசபையில் கேள்வி எழுப்பப்படுமளவிற்கு உண்மையை உணர்ந்துள்ளனர். இந்தியா ஒரு உபகண்டமே யொழிய தேசமல்ல என்று நாம் கூறிய காலத்தில், இவ்வுண்மையை மறுக்கவியலாமல் 'இதெல்லாம் உதவாப் பேச்சு' என்று மழுப்பினார்கள் சில உதவாக்கரைகள். [illegible]கி திருவாங்கூர் இணைப்பு விஷயமாக, கொச்சினிற்கிருந்த சமஸ்தான இலாகா காரியதரிசி தோழர் வி. பி. மேனன் நிருபர்களுக்களித்த பேட்டியில் ''பொருளாதார சௌகரியத்தை உத்தேசித்தாவது இந்தியாவைப் பிரிவுபடாத ஒரு பிரதேசமாகக் கருதவேண்டியது அவசியம்'' என்று கூறி நாம் சொன்ன உண்மையை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

''பொருளாதார உதவியை [illegible] சித்து இந்திய உபகண்ட[illegible] நாம் வெவ்வேறு இனத்த[illegible] தாலும் ஒன்று பட்டு வா[illegible] இது மத்திய சர்க்காரில் பொறுப்பான பதவியை வகித்து வரும் தோழர் வி. பி. மேனனின் உபதேசம். பணம் பணம் என்று மத்திய சர்க்காரை ஓயாமல் தொந்தரவு செய்யக்கூடாது; உணவு விஷயத்தில் மாகாணங்கள் தங்கள் சுயதேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்—இது மத்திய சர்க்காரின் கட்டளை. இதிலிருந்து திராவிட நாட்டுப் பிரிவினை நியாயமான, சாத்தியமான கோரிக்கை என்பது விளங்கவில்லையா? இதை மக்கள் உணராமலில்லை. உண்மையை எத்தனை நாள் மறைத்து வைக்க முடியும்? உண்மை வெளி வந்துதானே தீரும்.

கார்மேகங்களைக் கலைத்துக்கொண்டு கதிரவன் ஒளிபரப்புவது போல, கரிய முகில்களைக் கிழித்துக்கொண்டு மதி ஒளி வீசுவது போல, உண்மை ஒளி மக்களின் அகவிருளை அகற்றி வருகிறது. இதைக் கண்டு பொறாமை கொண்டு சில பொத்தல் டப்பாக்கள் பொங்கி எழுகின்றன. பூரணப் பொலிவு பெற்றிலங்கும் முழு மதியைக்கண்டு குக்கல்கள் குரைக்கத்தானே செய்யும். குக்கல்களின் குரைப்பைக்கண்டு மதியின் ஒளி மங்கியா போகும்? மங்க மதியீனர்களின் மடமை வெகு சீக்கிரத்தில் மடிந்தொழியும். உண்மை உயர்ந்தோங்கும். இது உறுதி.

''முருகு''

## அழகிரி மறைவுக்கு அநுதாபக் கூட்டம்.

7-4-49 தேதி மாலை 6-30 மணிக்கு குடந்தை நா. வடக்கு வீதி, பெரியார் வாசகசாலை, டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்த கட்டிடத்தில் மறைந்த தளபதி கே. வி. அழகிரிசாமி அவர்களுக்கு அநுதாபக் கூட்டம் தோழர் ஆர். சி. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் நடந்து கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

### தீர்மானம்

தஞ்சையில் 28-3-49 திங்கட்கிழமை காலஞ்சென்ற தளபதி கே. வி. அழகிரிசாமி மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்து துக்கப்படுவதுடன் ஷையாரின் குடும்பத்துக்கு தனது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது என்ற தீர்மானம் தோழர் கே. கே. நீலமேகம் [illegible]களால் பிரரேபிக்கப்பட்டு தோழர் [illegible]காரவேலு அவர்களால் ஆமோ[illegible]பட்டு நிறைவேறியது.

# அந்த விருந்து

“வில்லவா! நீ வீரனாக இருந்தும், உனக்கு விவேகம் தெரியவில்லையே!”

“மன்னவா! என் மனம் குழம்புகிறது!—நம்மை எள்ளி நகையாடிய எத்தர்களுக்கு; நம்முடன் போரிடத்தெரியாத பேடிகளுக்கு; தமிழகமே! உன் கை வரிசையைக் காட்டு! எனக்கூறிய அந்த தர்ப்பை ஏந்திகளுக்கு; விருந்தளிக்கச் சொல்லுகின்றீரே!—களத்தில் தோற்ற அந்தக் காவலரின் சிரத்திலே கல்சுமக்கவைத்து, இழுத்து வாருங்கள் என்று கூறிய வாயினாலேயே இன்று “அவர்களுக்குக் களிப்பு விருந்து நடத்துக” எனக் கூறுகின்றீரே!

எதற்காக அவர்களுக்கு விருந்து? கங்கைக் கரையிலிருந்து நெடுந்தூரம் கல் சுமந்துவந்த பெருவீரத்துக்கு மகிழ்ந்தா? அல்லது மாடலனின் மயக்க மொழிகேட்டு இவ்விதம் கூறுகின்றீரா!”

“ஆம்! வில்லவா, மாடலன் கூறியதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது. பலப்பல நாடுகளிலே நம் புகழ் பரவி விட்டது. எங்கும் நாம் இட்டதுதான் சட்டம் என்றாலும், இந்தச் சுகபோக அரச வாழ்வு இந்த ஜென்மத்தில் தானே! அடுத்த ஜென்மத்தில் நான் நியாயவானாக தர்மிஷ்டனாக மதிக்கப்பட வேண்டாமா! அதற்காகத்தான் மாடலன் நம்மிடம் வேள்வி செய்யச்சொல்கின்றான். மேலும் நாம் கைது செய்து சிறையில் வைத்திருப்பது பூதேவர்களை! ஏதோ போதாக் காலத்தினால் நம்மை எள்ளி நகையாடிப் போர்தொடுத்துத் தோற்றார்கள். இப்பொழுது அவர்கள் தாங்கள் புரிந்த தவறை உணர்ந்து வருந்துகிறார்கள். “பூதேவர்களைச் சிறையில் வைப்பது கொடுமையான பாவச்செயல்” என்று மாடலன், கூறவில்லையா? கொடுமையான பாவச்செயலை நாம் புரியலாமா! அதைப்போக்க வல்லவா முயற்சிக்கவேண்டும்!—அதற்காகத்தான் நாம் ஆரிய அரசர்களை விடுதலை செய்து—விருந்தளிக்க உத்தரவிடுகின்றோம்”

“மன்னர் மன்ன! உண்மையாகத்தான் உத்திரவிடுகின்றீரா?

வேல் தூக்கி வாழ்ந்த பரம்பரையில் தோன்றிய நாம், வேள்வி செய்து களிக்கவேண்டுமா!

அன்றொருநாள் சோலையில் நாம் உலவும் போது “டணார்—டணார்” என்ற ஒலி காற்றிலே கலந்து நம் காதுகளிலே ஒலித்த போது—“என்ன வில்லவா சத்தம்!”—என்று தாங்கள், என்னை கேட்க,—

“நம் வீரர்கள் வாள் போர் பயிலுகின்றனர்” என்று, பெருமையுடன் அன்று நான் கூறவில்லையா? இன்று மாடலனின் சொற்படி நீங்கள் நடக்க எத்தனித்தால், நம் மண்டபத்தில் மணி ஓசையைத்தான் கேட்க முடியுமே தவிர, வாள் ஒலியைக் கேட்க இயலாது. மேலும், நம் நாட்டு பூந்தோட்டங்களிலே, புள்ளிமான் துள்ளி விளையாட அதுகண்டு புளகாங்கிதமடைந்த நாம் இனி பூந்தோட்டத்தையும் புள்ளிமானையுங்காண இயலாது. ஓமகுண்டத்தால் ஏற்படும் புகைப்படலத்தைக் கண்டு தான் பூரிக்க வேண்டும்..........

அரசே! ஆரியக் கலையை நம்நாட்டில் புகுத்த விழைகின்றான் மாடலன். அவன் பேச்சில் ஏமாந்து விடாதீர்கள்!”

“வீண் பேச்சு வேண்டாம் வில்லவா! நாம் இட்டகட்டளையை நிறைவேற்றும். யாம் யாரையும் ஏமாற்றோம்-பிறர் ஏமாற்ற நாமும் ஏமாறோம்”

* *

தமிழரை இகழ்ந்து பேசி, போர் தொடுத்துத்தோற்று, சேரன் செங்குட்டுவன் படைத்தலைவனான வில்லவன் கோதையால் சிறை பிடிக்கப்பட்டு, காவலிலுள்ள கனகவிசயர் என்ற ஆரிய அரசர்களுக்கு “விருந்து” நடத்தவேண்டுமென்று வில்லவனிடம் மன்னன் செங்குட்டுவன் கூறியபோது, நாம் மேலே தீட்டியபடியே இல்லாவிட்டாலும், ஏறத்தாழ இதுபோன்றதோர் கருத்தமைந்த உரையாடல் நடந்தேதான் இருக்கும்!

* *

ஆரிய அரசர்களுக்கு விருந்திடுவது ஆபத்து என்று எச்சரித்தான் வில்லவன்.

மன்னன் வில்லவனின் பேச்சைக் கேட்கவில்லை.

விருந்து நடத்தியேதான் தீர்த்தான். ஆரியர் அகங்குளிர விருந்து நடத்துவதோடு மட்டும் நின்றுவிடவில்லை-நாடெங்கும் நல்ல முறையில் வேள்வி செய்ய உத்திரவிட்டான் செங்குட்டுவன்.

தமிழர் தலைவன் என்று போற்றப்பட்ட சேரன் செங்குட்டுவன் ஆரியர் சூழ்ச்சியிலே எப்படி மயங்கினான் என்பதை நோக்கும் போது திகைப்பும்—வியப்பும், நம்மைக் கவர்ந்து கொள்கிறது.

* *

மாடலன் என்னும் பார்ப்பனன் சிறையில் சிதைந்து கொண்டிருந்த ஆரிய அரசர்களைக் கண்டான்.

ஒரு ஆரியன் இன்னற்பட மற்றோர் ஆரியன் இன்புற்றிருப்பானா?

உடனே மாடலன் மன்னன் செங்குட்டுவனிடம் சென்றான், வேதாந்த விளக்க உரை நிகழ்த்தினான்.

மான் விழியாளின் தேன் மொழியில் மயங்கிடும் வாலிபனைப் போல—மாடலனின் பேச்சிலே மன்னன் மயங்கினான்.

அதன் பலன் நாடெங்கும் வேள்வியும், சிறைப்பட்ட ஆரியர்க்கு விருந்தும் நடந்தது.

* *

“இது ஏதோ பழைய காலத்தில் நடந்த தவறு—அதை ஏன் இப்பொழுது பிரமாதப்படுத்தி எழுதுகிறாய்?” என்று நண்பர்களுக்குக் கேட்கத் தோன்றும்.

உண்மைதான். இது பழைய காலத்தில் நடந்த தவறுதான்—என்றாலும் அந்தத் தவறு இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டு தானே இருக்கிறது.

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

16—4—49 சனிக்கிழமை.

# மஞ்சள் கரைகிறது, கரைந்து கொண்டே வருகிறது.

—◎—

'இந்தியாவில் கம்யூனிஸம் பரவி வருகிறதா?''

'கம்யூனிஸம் என்றால் இரு விஷயங்களைக் குறிக்கும். ஒன்று கம்யூனிஸ்ட் கட்சி; மற்றொன்று வறுமை காரணமாக ஏற்படும் அதிருப்தி. முன்னையதை இந்தியா சட்டை செய்யவில்லை. ஏனென்றால் பொதுத் தேர்தல்களில் கம்யூனிஸ்ட்கள் வெற்றிபெற முடியாது''

இது, ஒரு கேள்வியும் பதிலும். கேள்வி கேட்டவர், லண்டன் 'டெயிலி மெயில்' என்ற பத்திரிகையின் நிருபர். பதில் கூறியவர் இந்துஸ்தான் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள்.

இங்கு, நாம் இதை எடுத்துக் காட்ட எண்ணியது, இந்தியா என்ற பெரிய நிலப்பரப்பில்—உபகண்டத்தில், கம்யூனிஸம் எந்த அளவில் பரவியிருக்கிறது என்பதை எடை போட்டு நிறுத்து, எடுத்துக்காட்டவேண்டுமென்கிற எண்ணத்தோடல்ல. கேள்விக்குப்பதிலாக இந்துஸ்தானத்தின் முதல் மந்திரி கூறியிருக்கும் பதிலில், எந்த அளவுக்கு உண்மையிருக்கிறது; இந்த 'மஞ்சள் குளிக்கும்' நிலைமை இன்னும் நீடிக்குமென்கிற ஒரு நினைப்புக்கு இடமுண்டா? என்பதை எடுத்துக்காட்ட வேண்டுமென்பதற்காகத்தான்.

கம்யூனிஸ்ட் கட்சியால், நாட்டில் பரப்பப்படும் கருத்துக்களால் உண்டாகும் கம்யூனிஸம்; சுரண்டல்காரர்களின் ஆதிக்கம் நீடிப்பதால், தொடர்ந்து இருந்து வரும் வறுமை காரணமாக உண்டாகும் கம்யூனிஸம் என்பதாகக் கம்யூனிஸத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறார் நேரு அவர்கள்.

பொதுவுடைமை' ஆக்கவேண்டும் என்கிற கட்டுப்பாடான பிரச்சாரம் ஒன்று; பொதுவுடைமை ஆகவேண்டும் என்கிற கட்டாய நிலை ஒன்று என்பது அவர் காணும் கருத்து. முந்தியது செயற்கை என்றால் பிந்தியது இயற்கை என்பதும் அவரின் நம்பிக்கை.

நோயுள்ள நிலையில் தான் மருந்து தேவைப்படும்; மருந்துக்கு அவசியம். வழி தவறிய நிலையில் தான், வேறு வழி—நேர் வழி தேவைப்படும்; அந்த வழிக்கு அவசியம்.

தேவையில்லாத நிலையில், செய்யப்படும் பிரசாரத்தால், அந்தத் தேவையில்லாத நிலையை உண்டாக்கிவிடாலம் என்பது முடியாத ஒன்று; முடிந்தாலும் நீடித்து நில்லாது. ஆனால் தேவையான நிலையில், தேவைக்கு ஏற்றபடி சிந்தித்துச் செய்யப்படும் பிரச்சாரம் தீயில் எண்ணெயைக் கொட்டியது போலவல்லவா? வறுமையால் உண்டாகும் அதிருப்தி கம்யூனிஸத்திற்கு வழி வகுக்கும் என்றால், கம்யூனிஸத்தைப் பரப்ப வேண்டும் என்கிற பிரச்சாரம் எப்படி வெற்றி பெறாமல் போய்விட முடியும்?

நாட்டுக்கு-நாட்டு மக்களுடைய நிலைக்கு ஏற்ற திட்டமில்லாமல் ரஷியாவின் ஏஜண்டுகளாயிருந்து, கொண்டு கம்யூனிஸம் என்கிற தூய்மையான திட்டத்தைப் பழிக்க வைக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு நாம் வக்காலத்து வாங்கவில்லை. ஆனால் வறுமையும் வாட்டமும், வேதனையும் விம்மலும் அதிகரிக்க அதிகரிக்க, மற்றொரு பக்கம் வளமும் வளப்பமும், இன்பமும் எக்களிப்பும் பெருக்கத் தக்க வகையில் இருக்கும் போது—அந்த நிலையை நீடித்து நிலைத்திருக்க வைக்க வேண்டுமென்று அரசாங்கம் திட்டம் வகுக்கும் போது, உண்மையான கம்யூனிஸத்திற்கு எப்படித்தடை என்று சொல்லிவிட முடியும்? மேலும் உண்மையான கம்யூனிஸத்திற்குத் தடை விதிக்க வேண்டிய-எதிர்க்க வேண்டிய அவசியந்தான் ஏன்? என்று கேட்கிறோம்.

கம்யூனிஸம் பரவுகிறதா என்கிற கேள்விக்கு, கம்யூனிஸ்ட் கட்சியை இந்தியா சட்டை செய்யவில்லை; ஏனென்றால் பொதுத் தேர்தல்களில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற முடியாது என்று பதிலளிக்கிறார் நேரு.

இந்தப் பதிலைத்தான், 'மஞ்சள் குளிக்கலாம்' என்கிற நினைப்பு இன்னும் மாறவில்லை என்று நாம் குறிப்பிடுவது. இங்கு, இந்துஸ்தான் பிரதமர், இந்தியா என்றால் காங்கரஸ்தான்—காங்கரஸ் என்றால் இந்தியா தான் என்பதை மறைமுகமாக—ஆனால் அழுத்தமாக வற்புறுத்துகிறார்.

முதலாளித்துவக் கொள்கையுடைய—தனியுடைமைக்கு வாய்க்கால் வெட்டும் ஒரு அரசாங்கத்தில், பொதுவுடைமைக்கு வழி கோலும் யாருமே வெற்றி பெற்றுவிட முடியாது என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுவோம். ஆனால், இந்த நடப்பு என்றைக்குமே நீடித்திருந்துவிட முடியுமா?

ஒவ்வொரு மாகாணத்திலும் காங்கரஸ் தோழர்களின் நடத்தை, சாக்கடை நாற்றத்தையும் தோற்கடித்துவிடவே, இதற்கு முன்னால் நடந்த அட்வைசர்களின் ஆட்சி எத்தனையோஆயிரமடங்கு நல்லது என்று மக்களால் போற்றப்படும் இந்த நிலைமையிலும் கூட, தேர்தல் என்று வந்தால் காங்கரசுக்குத்தான் வெற்றி என்று பேசுகிறார்கள் காங்கரஸ் பெருந்தலைவர்கள். உண்மையான நம்பிக்கையாக இருந்தாலும் இருக்கலாம், அல்லது அப்படியாவது பேசித்தான் தீரவேண்டுமென்று நினைக்கலாம். ஆனால் அந்த நம்பிக்கை நசித்துக் கொண்டு வருவதை ஏன் கண்டு கொள்ள மறுக்கிறார்கள்?

இந்த மாதம் 11 தேதி சென்னை அசெம்பிளிக்கு நடந்த ஒரு உபதேர்தலில், அதன் முடிவு வெளியிடப்பட்டது. காலஞ்சென்ற திராவிடராகிய முத்துரங்க முதலியாரின் இடத்துக்கு ஒரு பார்ப்பனரும் ஒரு திராவிடரும்

போட்டி போட்டார்கள். பார்ப்பனர், தோழர் சீனுவாசய்யர்; திராவிடர், தோழர் பாலகிருஷ்ண முதலியார். பார்ப்பனத் தோழர், காங்கரஸ் தலைவர் காமராஜரால் அங்கீகரிக்கப்பட்டு காங்கரஸ் கட்சியின் சார்பில் நின்றவர்; திராவிடத் தோழர் சுயேச்சையாக நின்றவர். பார்ப்பனத் தோழருக்காகத் திராவிடக் காமராஜர் பல இடங்கள் சுற்றி சுற்றி, அலைந்து பல முறைகளையும் கையாண்டு, பலநாட்கள்கழித்தார். திராவிடத் தோழருக்காக—அவர் வெற்றி பெறவேண்டும் என்பதற்கு ஆக யாருமே அப்படிப்பாடுபடவில்லை. ஆனால் நிச்சயமாகச் சொல்லலாம் எந்த ஒரு பார்ப்பனர்கூட அந்தத் திராவிடர் வெற்றி பெறவேண்டும் என்று எண்ணியிருக்கவே மாட்டார்கள்.

மேலும், இந்தத் தேர்தலில் கலந்துகொண்டு ஓட்டுக் கொடுப்பவர்களோ, நூற்றுக்கு நூறு பார்ப்பனர்களும் பணக்காரர்களுமே ஆவார்கள் என்பதை மறந்துவிட முடியாது.

இந்தத் தேர்தலில் வாக்குக் கொடுப்பதற்கு, மராமத்து பக்தவத்சலனாரும், மாஜி சுகாதார ருக்மணி அவர்களும் பறந்துவந்தார்கள் என்பது பத்திரிகைச் செய்தி.

நிதி மந்திரி கோபால் ரெட்டியாரோ, ஜில்லா கலெக்டர் துணையோடு, வினாடி நேரத்தைக்கூட வீணாக்கிவிடாமல், ஒவ்வொரு ஓட்டுச் சாவடிக்கும் ஓட்டோட்டமாய் ஓடி நிலைமையைக் கவனித்திருக்கிறார். இதுவும் தேசிய ஏடுகளின் சேதி.

இப்படியாக மாஜி மந்திரி, சுமங்கலி மந்திரிகளின் பார்வையில்—அவர்களின் ஒத்துழைப்போடு நடந்த தேர்தலில்—தமிழ்நாட்டு ராஷ்டிரபதி சண்டப்பிரசண்டமாய் பொய்ப் பித்தலாட்ட வார்த்தைகளால் பராக்குக் கூறிவந்தும்—கம்யூனிஸ ஒழிப்பு வீரர்களான பணக்காரர்களும் பார்ப்பனர்களுமே வாக்குக் கொடுத்திருந்தும், காங்கரஸ் வெற்றி பெறறது எத்தனை வோட்டுகளால்?

காங்கரஸ் அய்யருக்கு 297. சுயேச்சைத் திராவிடருக்கு 289. எட்டு ஓட்டுகள் வெற்றிக்குக் காரணமென்றாலும், உண்மையில் அய்ந்தே அய்ந்து வோட்டுகள் தான் இந்த வெற்றிக்குக் காரணம். இந்த எட்டில், அய்ந்து ஓட்டுகள் மாறி இருந்துமானால், காங்கரசுக்குத் தோல்வி என்ற நிலை ஏற்பட்டிருக்கும். இந்தத் தேர்தலில காங்கரசுக்கு வெற்றி என்றால், அது அய்ந்துபேருடைய தயவால் ஏற்பட்ட நிலையே தவிர—உண்மையில் மாபெரும் தோல்வியே தவிர—வேறென்ன?

இந்தத் தொகுதியில் இன்னும் இருநூறுபேர் வாக்களிக்கவில்லை என்று வேறு கூறப்படுகிறது. இந்தத் தேர்தலில் எவ்வளவு தூரம் அதிகாரமும், சிபார்சும் பயன்படுத்தப்பட்டதோ நாம் அறியோம். இருந்தும் 5-ம்பேர் தான் காங்கரசின் மானத்தைக் காக்க முன் வந்தார்கள் என்றால், இந்த நிலைமை எதைக் காட்டுகிறது? மஞ்சள் கரைகிறது; கரைந்து கொண்டே வருகிறது என்பதை வற்புறுத்தவில்லையா? ஆனால், குப்புறவிழுந்தாலும்மீசையில் மண் ஒட்டவில்லை என்று பேசுவதையே வீரமாகவும்—கிரமமாகவும் கருதிப் பேசிவரும் காங்கரஸ் பெருந்தலைகள் இதை எப்படி ஒப்புக் கொண்டு விடும்?

ஆனால் இந்தத் தேர்தலின் முடிவு, காந்தியாரின் கொலையை நியாயமானது என்று வற்புறுத்தியிருக்கிறது என்றால், அதை எந்தக் காங்கரஸ் தோழர்தான் மறுக்கமுடியும்? எப்படியோ வெளிப்படையாகவும் ஒரு ஆர் எஸ். எஸ் காரருக்குச் சட்டசபையில் இடம் கிடைத்துவிட்டது என்றால் யார் தான் இல்லையென்று சொல்லிவிட முடியும்?

---

# ஆரியத்தின் பூரண கும்பம்!

(*○*)

இப்போது நம் சென்னைமாகாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புது மந்திரிசபையைப்பற்றி, முக்கியமாகப் புதுப்பிரதமர் ராஜபாளையத்தாரைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர் சிக்கிக் கொண்டிருக்கும் இக்கட்டான நிலையில் என்ன செய்வாரோ? பொறுத்துப் பார்ப்போம்! என்பதாகச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

மந்திரிசபையையே இன்னும் பூரணமாக அமைக்கவில்லை—எந்த ஒரு செயலையும் (சுற்றுப் பிரயாணத்தைத் தவிர) இன்னும் ஏற்கவில்லை என்று சொல்லும்படியான இந்த நிலையில், அதன் நடப்பைப் பற்றி ஒன்றும் கூற முடியாதாயினும், சூழ்நிலையைக் குறித்துச் சிறிது கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

'நாணயத்திற்குக் காங்கரஸ் தோழர்கள் சீட்டுக் கொடுத்துவிட்டார்கள்' என்று ஓமந்தூரார் பிரிவை மக்கள் கருதும் நிலையில், பிரிவுக்கு வருந்தினாலும், 'அடுத்தாற்போல் வந்த வரவுக்கு வாழ்த்துகிறோம்' என்று பேசும்படியான நிலையில், ராஜபாளையத்தார் பிரதமராக வந்துள்ளார். அவர் பிரதமராவதற்கு, காமராஜர் தயவுதான் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டிய முறையில், தோழர் காமராஜர் பலவகையாலும் காட்டிக் கொள்ளப் பாடுபடுகிறார் என்றாலும், உண்மை மக்களுக்குப் புரியாமலில்லை.

பதவி ஏற்றவுடனே, காமராஜருடன் பிரதமர் டெல்லிக்குக் காவடி எடுக்கப்போகிறார் என்று, எல்லாப் பார்ப்பனத் தினசரிகளும் எழுதின. ஆனால் எக்காரணத்தாலோ (?) பிரதமர், மராமத்து மந்திரியுடன் தனித்து, முன் கூட்டியே டெல்லி சென்றதாகப் பின்னால் செய்தி வந்தது.

பிறகு காமராஜர் போய், தன் காரியம் முடிந்ததா என்று பார்த்தால், அதுவும் தலைகீழாகத்தான நடந்திருக்கிறது. காமராஜருக்கு டெல்லியில்—மேலிடத்தில் கரி பூசப்பட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

கட்சியினுள்ளே 'கோஷ்டிகள்' இருப்பதுதான், கட்சியின் வளர்ச்சிக்கு நலமெனக் கூறிக்கொண்டு, சுயநலத்திற்குத் தங்கள் ஜாதி வெறியைக் காப்பாற்றிக்கொண்டு வருவதற்காகக் 'கோஷ்டிகளை'ச் சிருஷ்டித்துக் கொண்டு, அந்தக் கோஷ்டிக்குப் பெயர் "சுப்பாயன் கோஷ்டி" என்று கூறிக் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிட்ட பார்ப்பன கோஷ்டிக்கு, பிரதமர் தேர்தலில் கிடைத்த ஓட்டு விகிதாச்சாரப்படி பதவி வாங்கித் தருவதாக ஒப்பந்தம் பேசி, அவர்கள் யார் யார் என்கிற ஜாபிதாவுடன் தோழர் காமராஜர் போனதாகவும், அங்கு, அதற்கு

முன்னாலேயே மேலிடத்தார் தங்களுடைய முடிவை நம் பிரதமரிடம் கூறிவிட்டதாகவும், முடிவு கூறியதுடன் இல்லாமல், கோஷ்டிகள் உண்டாகியிருக்கும் நிலையைக் கண்டித்து, 'குரைப்பதற்கு எலும்புத் துண்டு போடுவது' எனும் கொள்கையைப் பின்பற்றக்கூடாதெனத் தெளிவுபடுத்தி, பிரதமருக்கு வேண்டிய முறையில் மந்திரி சபை அமைப்பை ஏற்படுத்த யோசனையும் கூறி, இப்போது அமைந்துள்ள மந்திரிசபையை ஒப்புக்கொண்டு விட்டதாகவும் கூறிக்கொள்ளப்படுகிறது. இந்த நிலைமையில், பின்னால் போய், மூக்கறுபட்டு வந்த தோழர் காமராஜர் இன்னும் இணைப்புவேலைக்கே ஆவன செய்து வருகிறாராம். இது தோழர் காமராஜ (ஆய்ய)ர் திருவிளையாடல்!

பிரதமர் ராஜபாளையத்தார் பதவி எற்றவுடனே, பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாம் அவரைக் கண்டிக்கவும், அவருக்குப் புத்தி கூறவும் ஆரம்பித்திருக்கின்றன. அவை, "புதிய மந்திரிசபை காங்கரஸ் கட்சியிலுள்ள எல்லாக் கோஷ்டிகளும் கலந்ததாக இல்லாதுபோனது ஏன்?" என்று ஒரு பக்கம் சீறுகின்றன.

"இன்றையமந்திரிசபைக்கு, கம்யூனிஸ்டுகளையும் வகுப்பு வாதிகளையும் உடனே ஒழித்துக்கட்ட உறுதியான வேலை செய்வது தான் முக்கிய பொறுப்பு" என்றும், வகுப்பு வாதிகள் என்று நம்மைச் சுட்டிக் காண்பித்து, நம்மை ஒழிக்கப் புதிய மந்திரிசபையை மற்றொருபக்கம் துணைக்கு அழைக்கின்றன.

காமராஜ (அய்ய)ர், தேசியப் பார்ப்பனர்களின் ஏடுகள் ஆகியவற்றின் தில்லுமல்லுகள் இப்படியிருக்க, ஒரு நாள் கர்ப்பத்தில் உதித்த "தமிழ் நாடு இந்தி தீவிர பிரசாரக் கமிட்டி" என்கின்ற மன்னார்குடியில் கூடிய ஒரு பார்ப்பனக் கமிட்டி புதுப் பிரதமருக்குத் தன் ஆசியைத் தெரிவிக்கிறதாம். இதன் பொருளென்ன? நாங்கள் எந்த வேஷம் போடுவதற்கும் தயாராய் இருக்கும் போது நீங்கள் கட்டாய இந்தியை எடுத்து விடாதீர்கள், இந்தத் திராவிடக் கழகத்தாரின் எதிர்ப்புக்குப்பயந்து என்று தூபம் போடுவதுதானே.

பூரண கும்பம் எடுத்திருக்கிறது ஆரியம் என்பதற்குப், பார்ப்பனர்கள் சார்பாக மணி ஐய்யர் வாழ்த்தியிருக்கும் வாழ்த்தைக் குறிப்பிட வேண்டும். 'நாமிருக்கப் பயமேன்' என்பதுதானே இதன் பொருள்.

'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக்கட்டு! கல்வி இலாகாவிலும், ஏனைய நிர்வாகத்திலும் அதனை வலியுறுத்திக் கவனித்த காரணத்திற்காகத்தானே இப்போது இருவரை ஓடச் செய்திருக்கிறோம்; இதை நீர் நினைப்பில் கொள்ளாவிட்டால் உம் கதியும் அதேதான்' என்று நினைப்பூட்டுவதுதான், பார்ப்பனர்களின் இந்தப் பூரண கும்பத்திற்குப் பொருள்.

ஐய்யங்கார்கள் சார்பில் வாழ்த்தியுள்ளவர், இந்துஸ்தான் மந்திரி தோழர் சந்தானமய்யங்கார். அவர் தன்னுடைய வாழ்த்தில் கூறியிருப்பது, 'வலிமையும், ஸ்திரத் தன்மையும், பொதுஜன ஆதரவும் வாய்ந்த மந்திரிசபையை அமைக்க என்று. இது வாழ்த்தல்ல, அய்யங்கார்—ஆச்சாரியார்களின் சார்பான உத்திரவு. பார்ப்பனர்களுக்குப் பதவியில் பகுதி இடம்கொடு என்பதைத் தவிர இதற்குப் பொருள் என்ன?

இப்படிக் கொடுக்கத் தவறினாலும், தங்கள் சொற்படி கேட்கத் தவறினாலும், மந்திரி சபைக்குச் சீட்டுக் கிழிக்கும் வேலையைப் பார்க்கக்,காமராஜரைக் கையாளாக வைத்திருக்கிறோமே என்று இறுமாப்புக் கொண்டிருக்கிறது ஆரியம். தந்தி அனுப்பிய அய்யங்கார், இனி விரைவாக இந்த நாட்டை வலம் வரவும் இருக்கிறாராம்.

இந்த மந்திரி சபை அமைக்கப் பட்டவுடன் வெளியிட்டிருக்கும் முதல் உத்திரவு, பொது மக்கள் பிரதமரைப் பேட்டிகாண, நேரத்தைக் குறிப்பிட்டிருப்பதுதான். இதற்கு முன்னால் ஓமந்தூரார் மீது சாட்டப்பட்ட ஒரு குற்றம், மக்களை அவர் பார்ப்பதற்குமறுக்கிறார் என்பது. மக்கள் என்பது யார்? யாருக்கு அவர் பேட்டி மறுத்தார்? எதற்காகப் பேட்டி நாடிவந்தனர்? பேட்டிக்குவந்தவர்களோ சாதாரணச் சுப்பனும் குப்பனுமல்ல. சட்டசபை உறுப்பினர்கள். நூற்றில் ஒருவர், ஆயிரத்தில் ஒருவர் என்று மதிப்பிடக் கூடிய நிலையில் உள்ளவர்கள்கூட அல்ல. மூன்று லட்சத்துக்கு ஒருவர் என்று மதிப்பிடக் கூடிய நிலையில் உள்ளவர்கள். அப்படியிருந்தும் ஓமந்தூரார் பேட்டி மறுத்தார். ஏன்?

அவர்கள் வரும் வேலையோ பேரம் பேசும் வேலை. வாங்கிய காசுக்குப் பெர்மிட் பெறும் வேலை. வேறு என்ன வேலையாக இவர்கள் சென்றார்கள்? நிர்வாக விஷயமாக என்றால், நிர்வாகத்தில் எதைப் பற்றிப் பேசப் போவதாக, யார்கேட்டு, எப்போது பேட்டி மறுக்கப்பட்டது? என்பதற்கு யாரேனும் ஒரு எடுத்துக் காட்டையும் இந்த நாள் வரை காட்டவில்லையே? இருக்கட்டும், இந்தக் குறையை ராஜபாளையத்தார் நீக்கிவிட்டார்.

பேட்டி காணக் காலங்குறித்ததுடன், இவர் காலத்தில் சென்னைக் கலெக்டரால், "சட்டசபை உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில், அரிசி அரைக்கப்படும் எந்த இடத்திலும் நுழைந்து கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கும், லைசன்ஸ் பெற்றவர்களின் அரிசிக் கையிருப்பைச் சோதித்துப் பார்ப்பதோடு, கையில் ஒருவாய் அரிசியையும் எடுத்துச்செல்லலாமென்பதாகவும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் சட்டசபை உறுப்பினர்களுக்கு, அதிகமாக அவரிடம் வரவேண்டிய வேலை இருக்காது என்று நம்பலாம். பிரதமரைப் பார்க்காமலே இவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதல்லவா?

இவ்வளவு சூழ்நிலையில், துணை மந்திரிகளையோ, பார்லிமெண்டரிக் காரியதரிசிகளையோ நியமிக்கவும் ஆலோசனை வேறு இருக்கிறதென்றால், எல்லோரையும், எல்லாக் கோஷ்டியினரையும் திருப்தி செய்யவேண்டுமென்பதற்குத் தானே இந்த முயற்சி. இந்த முயற்சி செயலுக்கு வருமானால் "எவரும் எல்லோரையும் திருப்தி செய்ய முடியாது" என்ற, கழுதை சுமந்தவன் கதைபோலத் தானே முடிந்து விடும். இதை ராஜபாளையத்தார் எண்ண மறக்க மாட்டார் என்று நம்புகிறோம்.

எப்படியிருப்பினும், முந்திய மந்திரிசபை செய்த சில நல்ல செயல்களையும் புதிய மந்திரிசபை ஒழித்துவிட வேண்டுமென்று பார்ப்பனர்கள் முயற்சி செய்வதைப்போல,

## கவனிக்க!

நமது ஆபிசுக்கு, எக்காரியத்திற்கேனும் பணம் அனுப்புபவர்கள், தனிப்பட்டவர்களின் பெயரையோ, வேறு முகவரியையோ குறிப்பிடாமல், மானேஜர், குடி அரசு, ஈரோடு என்கிற முகவரிக்கே அனுப்பவேண்டும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

# படித்துப் பாருங்கள்.

★

1. உலகத்தின் ஏனைய நாடுகளில் செய்திப்படம் காட்டப்படுவதை மிகவும் முக்கியமாகக் கருதி, அதன்மூலம் மக்களுக்கு அறிவு பரவும் வகையைக் கையாளப்படுகிறது. ஆச்சரியகரமானது என்று கருதப்படும் பொருள்களும், நிகழ்ச்சிகளும் அவைகளில் முக்கியமாகக் கருதப்படுவனவாகும். அந்தத் துறையில், ஒரு தடவை நியூயார்க்கில் ஆயிரம் செய்திப் படங்களை ஆராய்ச்சி செய்தபொழுது, இந்தியாவைப்பற்றி மூன்றே மூன்று செய்திப் படங்கள்காட்டப்பட்டன. ஒன்றுசிலோனில் யானைகள் வேலை செய்வது. இரண்டாவது இந்தியாவிலிருந்து சில குரங்குகள் நியூயார்க்கில் இறக்குமதி செய்வது. மூன்றாவது, ஹைதராபாத் நைஜாம். யானை, குரங்கு, ராஜா இம்மூன்றும்தான் இந்தியாவில் ஆச்சரியகரமான, அறிவைப் புகட்டக்கூடிய செய்திப் படங்கள்!

2. சினிமா உலகின் தலைநகர் ஹாலிவுட் சிடி. இது மிகமிக அழகான நகரம். இது அமெரிக்காவில் பசிபிக் கரையோரத்திலிருக்கிறது. இந்நகரின் ஜனத் தொகை மூன்று லட்சம். அதில் இரண்டு லட்சம்பேர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அமெரிக்காவில் முக்கிய தொழில்களில் சினிமாத் தொழிலும் ஒன்று.

3. அமெரிக்காவின் ஜனத்தொகை பன்னிரண்டுகோடி. அங்கு சினிமா தியேட்டர்கள் இருபதாயிரமிருக்கின்றன. பெரும்பாலும் எல்லாத்தியேட்டர்களிலும் செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன.

4. உலகத்திலேயே மிகப் பெரிய சினிமா படம் எடுக்கும்ஸ்டுடியோ ஜெர்மனியிலுள்ள ஊ பா ஸ்டுடியோ.

5. உலகத்திலுள்ள மிகப் பெரிய சினிமா தியேட்டர், நியூயார்க் நகரிலுள்ள ரேடியோ சிட்டி மியூசிக்ஹால். இதற்கு ஆறு மாடிகள் உண்டு. பதினாறு லிப்டுகள் இருக்கின்றன. ஆறாயிரம் மக்கள் ஒரே சமயத்தில் உட்கார்ந்து காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். காட்சியைக்காணச் செல்லுகின்றவர்கள் எல்லோருக்கும் ரொட்டியும், டீயும் இலவசமாக வழங்கப்படுகிறது. அந்தத் தியேட்டரில் உள்ள இன்பங்கள் எல்லோருக்கும் பொதுவுடைமை.

6. அமெரிக்காவிலுள்ள மற்றொரு தியேட்டர் பாரடைஸ். இதில் மூவாயிரம் பேர் உட்காரலாம். காட்சிகளைக் காணுவோர் வெட்ட வெளியில் உட்கார்ந்திருப்பதைப்போல் எண்ணும்படியாக இருக்கிறது. நீலவானம், ஒளிவீசுகின்ற நிலா, நட்சத்திரங்கள், கருத்து உருண்டு செல்லும் மேகங்கள்—பரந்த வெளியிலிருந்து காட்டப்படுவதல்ல, செயற்கைச் சாதனங்கள் தான். இப்படிப்பட்ட தியேட்டரில் ஆண்களும், பெண்களும் ஜோடிஜோடியாக உட்கார்ந்து படம் பார்ப்பதைக் காணுவதே பெரிய காட்சியல்லவா?

7. இங்கிலாந்தின் அறிஞர் ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் மிகப் பருமனானவர். அறிஞர் பெர்னாட்ஷா மிகவும் ஒல்லியானவர். ஒரு நாள் செஸ்டர்டன் ஷாவைக் கண்டு "உன்னை யாராவது பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் வந்திருக்கிறது என்று எண்ணிக் கொள்வார்கள்'' என்றார். அதற்கு ஷா பதில் கூறும்போது, உன்னைப் பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணத்தையும் தெரிந்து கொள்வார்கள் என்று கூறினார்.

8. இஸிடோராடங்கன் என்ற அமெரிக்கா நடிகை மிகவும் அழகானவள். அவள் அறிஞர் ஷாவின் அறிவின் மேன்மையைக் கேள்விப்பட்டு, தான் அழகில் சிறந்திருப்பதாலும், ஷா அறிவிற் சிறந்திருப்பதாலும் இருவரும் மணம் செய்து கொண்டால் அறிவும் அழகும் சேர்ந்த குழந்தைகள் பிறக்கும் என்று சொன்னாளாம். அதற்கு ஷா, "நீ கூறியதற்கு மாறாக உன்னுடைய அறிவும், என்னுடைய அழகும் சேர்ந்து பிறந்து விட்டால் அதைவிட மானக்கேடு வேறு எது?" என்று கேட்டாராம்! அம் மாது திக்கு முக்காடிப் போனாள்.

9. இந்தியாவைப் பார்த்துவிட்டுச் சென்ற ஒரு ஆங்கில வாலிபன் ஒருவனை, அவனது தாய், "இந்தியாவில் நீ கண்ட முக்கிய சங்கதிகள் என்ன?" என்று கேட்டாள். அதற்கு அவ்வாலிபன் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டுவரும்போது, இந்திய சமஸ்தானங்களைப்பற்றியும் ஒன்றுசொல்லி வைத்தான். அது பின்வருமாறு: "இந்தியாவிலுள்ள சில சமஸ்தானங்களில் 'பூட்ஸ்' காலுடன் செல்லக்கூடாது" என்றான். அவன் தாய் "ஏன்?" என்று கேட்டாள். "ஏனென்றால் 'பூட்ஸ்' காலுடன் ஒட்டிக்கொண்டு வந்துவிடுமாம், அவ்வளவு சிறிய சமஸ்தானம்'' என்று கூறினான்.

10. அமெரிக்காவில் ஒரு பிரதேசத்தில் ரோடு போடும்போது ஒரு பிரமாண்டமான மரம் ஒன்று தடுத்தது. சில எஞ்சினீயர்கள் அம் மரத்தை அடியோடு வெட்டிவிடவேண்டும் என்றனர். சிலர் ரோடை சிறிது தள்ளிப் போட்டுவிடலாம் என்றனர். கடைசியில் இரு கட்சியினரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர், மரத்தையே குகைபோலக் குடைந்துவிடுவதென்று.

---

நாமும், முந்திய மந்திரிசபைசெய்த சில காட்டுமிராண்டிச் செயல்களுக்கு—அக்கிரம நடத்தைக்கு, அதாவது

அண்ணாமலை நகரில், அடித்த மாணவர்கள் மீதுள்ள போலீஸ் கேசை வாபீஸ் வாங்கிக்கொண்டு, அடிபட்ட நம் மாணவர்களைத் தண்டிக்கச் செய்ததை,

சேலத்தில் நம் தோழர்களின் கண்ணைப்பறித்துக் காலை முடமாக்கியதை,

அங்கு நம்மைத் தாக்க ஆயுதங்கள் வைத்திருந்ததைப் போலீசார் ஒரு வீட்டில் கைப்பற்றியும், எந்த வித நடவடிக்கையும் எடுக்காததை,

மதுரையில் நம் மாநாட்டுப் பந்தலைக் கொளுத்தியவர்களைப் பகிரங்க விசாரணை செய்யக் கோர்ட்டுக்குக் கொண்டுவராததை,

ஆகிய இவற்றை—இவை போன்ற இன்னும் பலவற்றைப் பற்றியெல்லாம்குறிப்பிட்டு, இவைகளுக்கு என்ன பரிகாரம் என்று கேட்க விரும்பவில்லை.

ஆனால், இப்போதையப் பிரதமர் பதவியேற்றவுடன், முந்திய மந்திரிசபையின் கொள்கையின் படிதான், இந்த மந்திரிசபையும் நடக்கும் என்று கூறிய உறுதிமொழிப்படி, உண்மையாகவே, உறுதியுடனும் நாணயத்தோடுமாவது நடந்து கொள்ள வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம்.

அதையே செய்து முடித்தனர். அந்தப் பெரிய மரத்தைக் குடைந்து கொண்டு செல்லும் பாதையின் அகலம் பத்தடி. அப்படி ஒன்று இருந்தால் நம் நாட்டு எஞ்சினியர்கள் என்ன செய்வார்கள்?

11. ஐரோப்பாவில் ஒரு தேசத்தில், அந்த நாட்டுச் சட்டத்தை மீறி ஒருவன் மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொண்டான். இந்தச் சங்கதி அரசாங்கத்திற்கு எட்டிற்று. அரசன் ஆணையிட்டான நீதிபதிக்கு. மூன்று நாட்களுக்குள் அந்தக் கேசை விசாரித்து அவனுக்குத் தண்டனை தராவிட்டால் வேலையிலிருந்து நீக்கி விடப்போவதாக அரசன் நீதிபதியை மிரட்டினான். நீதிபதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். நாட்டின் சட்டத்திற்கெதிராக மூன்று பெண்களை மணந்துகொண்டவனுக்கு என்ன தண்டனை அந்த நீதிபதி தந்தார் தெரியுமா? அந்த மூன்று பெண்டாட்டிகளுடனும் அவனது வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படவேண்டியது தான் என்று தீர்ப்பளித்தார்.

12. சினிமாத் தொழிலில் பெயர் போன ஹாலிவுட் சிட்டியில் எடுக்கப்பட்ட ஒரு சினிமாப்படம் 120 நிமிஷங்கள் ஓடுகிறது. இந்த 120 நிமிஷத்தில் 180 முத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அதாவது இரண்டு நிமிஷங்களுக்கு மூன்று முத்தங்கள் விகிதம், கதாநாயகனும் கதாநாயகியும் கொடுத்துக்கொள்கின்றனர். இவ்வளவு முத்தங்கள் வேறு எந்தப் படத்திலும் கொடுக்கப்படுவதில்லையாம்.

"எமாரம்"

---

## இந்தக் காலத்திலுமா?

—( )—

கொடுமுடியைச் சேர்ந்த குன்னாங்கல்பாளையத்தில் ஒரு மந்திரவாதி இருக்கிறாராம்! அவருடைய மூலதனம் மயிர், கயிறு, மான்தோல், மண்டை ஓடு, மண்பொம்மை!

மக்களின் மடமையைச் சொள்முதலாகக் கொண்டு அவர் மச்சவீடு, நஞ்சை, புஞ்சை முதலியன சம்பாதித்து விட்டாராம்!

இந்த 1949-ம் ஆண்டிலும் மக்கள் மந்திரவாதிகளின் மாயா ஜாலத்தில் ஏமாந்து கைமுதலை இழக்கிறார்களே? அந்தோ பரிதாபம்!

ஏமாறுகிறவர்கள் உள்ள வரையிலும், ஏமாற்றுகிறவர்களைக் குற்றம் சொல்லுவதில் பயன் என்ன? மக்கள் விழிப்படையும் நாள் எந்நாளோ?

---

## திராவிட மாணவர் பயிற்சி.

திராவிட மாணவர் பிரசாரப் பயிற்சி 25-4-49 முதல் நடத்தப்பட இருப்பதற்கு, பயிற்சி அளிக்க 15 அறிஞர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டு அனுப்பப்பட்டு விட்டது. அச்சீட்டுடன் 25-4-49 காலை பயிற்சி துவாமிற்கு அவர்கள் வந்து சேரும் ஒப்பந்தத்தை உடனே 20-4-49 க்குள் இவ்விடம் அனுப்பி வைக்கவேண்டியது.

சில மாணவர்களுக்கு முன் பதிவென் அனுப்பியபோது வந்து சேரவில்லை எனக் கடிதங்கள் வந்தன. காரணம் அவர்கள் தெளிவான விலாசம் தராமையால் இருக்கலாம்.

சில மாணவத் தோழர்கள் இன்னும் மனு அனுப்புகிறார்கள். காலங் கடந்துவந்த மனுக்கள் யாவும் கவனிக்கமுடியாது போனமைக்கு வருந்துகிறோம். ஆகவே அழைப்புப் பெற்றவர்கள் மட்டும் உரிய காலத்தில் நிபந்தனைப்படி வந்து சேரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

செயலாளர்

தி மா. பி. ப கமிட்டி,
C/o "குடி அரசு"
49, கச்சேரி வீதி, ஈரோடு.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சேரன் செங்குட்டுவன் என்ற பெயரைக் கேட்ட உடனேயே அவன் படைவீரமும், ஆரிய அரசர்களைக் கல் சுமக்க வைத்த காட்சியுந்தான் நம் கண்முன் தெரிகிறதேயொழிய—அவன் மாடலன் பேச்சிலே மயங்கி ஆரிய அரசர்களுக்கு விருந்திட்ட காட்சி நமக்குத் தெரிவதில்லை.

அந்த விருந்திட்ட காட்சி நம் கண்முன் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்காதல்லவா, அந்தப் பழைய தவறு மீண்டும் நம் வாழ்வுப் பாதையில் நிகழாதவாறு தடுக்க ஏதுவாகும்.

நாம் வாழும் இக்காலத்திலும் "அந்த விருந்து" நடந்து கொண்டு தானிருக்கிறது என்பதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு.

*　　　*

"அன்பர் ஆச்சாரியார் ஒரு ஆகஸ்டு துரோகி, அவர் காங்கரசில் நாலு அணா அங்கத்தினராக இருப்பதற்குக்கூட யோக்கியதை அற்றவர்" எனக்கூறிப் பட்டி தொட்டியெல்லாம் ஆச்சாரியாரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்த காமராசர்—ஆச்சாரியார் மேற்கு வங்கக் கவர்னர் ஆனபிறகு டில்லிக்கு ஓடிச்சென்று, அவருக்கு விருந்தளிக்கவில்லையா!

"தமிழரையா! இகழ்ந்து பேசினர், உடனே போர் தொடு" என்று கூறிய செங்குட்டுவன் போல "ஆச்சாரியாரா! அவர் ஆகஸ்டு துரோகியாச்சே, அவருக்கு இந்த இடமில்லை" என்று ஆர்ப்பரித்தார் காமராசர்.

ஆனால், இறுதியில் மாடலனின் பேச்சிலே மயங்கி செங்குட்டுவன் விருந்திட்டதைப் போல ஆச்சாரியார் மேற்குவங்கக்கவர்னரானதும் காமராசர் டில்லி சென்று அவருக்கு விருந்தளித்தார்.

சேரன் செங்குட்டுவன் காலத்தில் நடந்த அந்த விருந்து, நாம் வாழும் இக்காலத்திலும் நடந்து கொண்டுதானே இருக்கிறது.

*　　　*

டில்லி விருந்தின் போது:—

காமராசர்—ஆச்சாரியாரைப் பார்த்து, "இதோ! கனிரசம் பருகுங்கள்" எனக்கூறியிருப்பார்—ஆச்சாரியாரோ, கனிரசக் கோப்பையை கையிலேந்திக் கொண்டு புன்னகை பூத்திருப்பார்!

"அடபாவி! இறுதிவரை என்னை எதிர்த்து நிற்பேன் என்றல்லவா, போர்க்கொடிஉயர்த்தினாய். இப்பொழுது எங்கே போயிற்று உன் வீரமும், தீரமும்? இதுதானப்பா ஆரிய சூழ்ச்சி என்பது புரிந்துகொள்" என்ற இவ்வளவு கருத்தும் அவரின், புன்னகைக்குள்ளே புதைந்து கிடக்கும்.

காமராசருக்கு அந்தப் புன்னகையின் புதிர் புரியாது!

ஆகவே "அந்த விருந்து" இன்னும் தொடர்ந்து நடவாதிருக்க, நாட்டு நிலையில் காட்டங்கொண்டுள்ள நண்பர்கள் முயற்சிப்பார்களா!

தங்கவேலர்.

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

ஆலயம் வேறு நமக்கு என்ன செய்திருக்கிறது?

வௌவால் போன்ற இறக்கைகள் கொண்ட பிசாசுகளையும், குறும்பு நிறைந்த சிறு பிசாசுகளையும் நமக்குக் கொடுத்திருக்கிறது. மனித உடலிலே நீந்தி மகிழும், பேய், பூதங்களையும், வேதாள ஆவிகளையும் நமக்குக் கொடுத்திருக்கிறது. நமக்கு நரகத்தைக் கொடுத்து, தெய்வீக நெருப்பிலே பொரிந்து கொண்டிருக்கும் மனித ஆத்மாக்களைக் காட்டியிருக்கிறது. இவ்வளவு காரியத்திற்கும் காரணமான ஆலயங்கட்கு— ஆய்தீக ஆலயங்கட்கு நாம் நன்றி கூறலாமா?

இவ்வுலகிலேயே நரகத்தை ஏற்படுத்திய ஆலய கர்த்தாக்களுக்கு நாம் நன்றி கூறலாமா? அடுத்த உலகிலே நரகத்தை ஏற்படுத்திய அவர்கட்கு நாம் நன்றி கூறலாமா?

II.

ஆலயங்கட்கு அடிப்படை அமைத்தவரும்; போப்பாண்டவர்களையும், குருமார்களையும், பிஷப்புகளையும், பாதிரிகளையும், துறவிகளையும், ஆலய அமைச்சர்களையும் ஏற்படுத்தி, தெரிந்தெடுத்தும், பிரித்து வைத்தும், புண்ணியசீலர்களாகவும், அருளுடையோர்களாகவும் ஆக்கி; வேதத்தைப் புனித நூலாக ஆக்கியும், ஆய்தீக வழிகளை உண்டாக்கி வைத்தது, காணமுடியாததோர் புனிதக்கடவுளாகும் என்பதை நாம் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும்!

புனித ஆவி நிறைந்ததாக கற்பிக்கப்படும் இம்மனிதர்கள் என்ன செய்துள்ளார்கள் என்பது நமக்குத் தெரியும். எவ்வளவு துரோகம் செய்துள்ளார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவர்கள் எத்தனை ஆத்மாக்களைக் காப்பாற்றினார்கள், எத்தனை உடல்களை அழித்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவர்கள் எவ்வளவு திருப்தி கொடுத்தனர் என்பதும், எவ்வளவு இன்னல் கொடுத்தனர் என்பதும், எத்தனை பொய்களை ஆதரித்தும், உண்மைகளை எதிர்த்து முள்ளனர் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள், துறவே எல்லாப் புனிதங்களினும் தலை சிறந்தது என்றும், பெண்கள் உணர்ச்சியின் பெட்டகம் என்றும், அவர்கள் உண்மையான தெய்வீகத்திற்கு எதிரிகள் என்றும், பாதிரிகள் தந்தைகளை (தகப்பன் நிலையை) விட மேலானவர்கள் என்றும், கன்னிப் பெண்கள் (கன்யாஸ்திரிகள்) தாய்மை நிலையைவிட தூய்மையானவர்கள் என்றும் கோடிக்கணக்கானவர்களை நம்பச் செய்து வந்திருக்கிறார்கள். பாலஸ்தீன நாட்டிலே கடவுள் தச்சனாகத் தோன்றினார் என்ற புண்ணிய புராணத்தை புனிதமாகக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அறிவை இருவிதமாகப் பிரித்துள்ளார்கள். ஒன்று புனிதமானது, மற்றொன்று புனிதமற்றது. கூறுவது—கூறப்பட்டது புனிதம். சிந்தனை, தெய்வநிந்தனை. நம்பிக்கை புனிதம்; உண்மை பொய்யாம். ஆதாம், ஏவாளின் பாபம், நோயையும், நொடியையும், வேதனையையும், மரணத்தையும் உலகில் கொண்டு வந்துவிட்டதாம். அவர்கள் தனிக்கொள்கை என்ற கட்டுபுராணங்களை உண்டாக்கியும், எல்லா நிகழ்ச்சிகளும், நடத்தையும், கடவுளால் உத்திரவிட்டு நடத்தப்படுவதாகவும்; அவர் விரும்பினால் முடிசூட்டியும், கழற்றியும், சேமித்தும், அழித்தும்; பாதுகாத்தும், நொறுக்கியும் உலகை நடத்துவார் என்றும்; எவ்வளவு பாபம் செய்திருப்பினுஞ் சரி, எவ்வளவு இன்னல் இருப்பினுஞ் சரி, எவ்வளவு வேதனையும், மரணமுமாயிருப்பினுஞ் சரி, எவ்வளவு இழிவான தாயினுஞ் சரி, மனிதன் இதயத்திலுள்ளதை அந்த தெய்வீக ஆத்மாவிடம் ஒப்படைக்க வேண்டியது மனிதனின் கடமை என்றும் போதித்துள்ளது.

நான் சிறிது அறிந்து கொள்கிறேன்! ஆலயங்கள் உண்மையற்றது என்றோ, குருமார்கள் நேர்மையற்றவர்கள் என்றோ, நான் கூறவோ, நினைக்கவோ, இல்லை. எல்லா மதங்களும், எல்லா கொள்கைகளும், எல்லா பாதிரிகளும் இயல்பாக ஏற்பட்டவர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இயற்கைக்கு அப்பாற்பட்ட "ஒன்றை" நம்புபவர்கள் ஒரு சிறிது நன்மை செய்துள்ளார்கள்; ஆனால் அதைக் கடவுளையோ, பிசாசையோ நம்பியதற்காகவல்ல, மனிதத்தன்மை என்ற முறையிலே செய்தார்கள் என்பதை நான் நேர்மையாக, மகிழ்ச்சியாக ஒப்புக் கொள்கிறேன்.

ஆயிர ஆயிரக்கணக்கான குருமார்கள் நேர்மையாகவும், தன்னலம் மறுப்பவராகவும், மனிதத்தன்மை யுடையவர்களாகவும்; ஆணும், பெண்ணும் தூய்மையாகவும், நேர்மையாகவும் வாழவேண்டும் எனப் பாடுபடுவதையும் நான் அறிவேன். இவையெல்லாம் அவர்கள் கொள்கையின் பலனாய்ச் செய்யவில்லை. மனிதத்தன்மையின் பயனாய்ச் செய்ததாகும்.

நான் கூறுவது என்னவென்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட 'ஒன்றை' போதிக்கும் நேர்மையாளர் ஒவ்வொருவரும், மனிதத்தன்மையின் எதிரிகளாக இருந்தார்கள்—இருக்கிறார்கள் என்பதே.

இயற்கைக்கு அப்பாற்பட்ட 'ஒன்றை' நம்பக் கூடியவர்களின் ஆலய தத்துவம் என்ன?

இவைகட்கெல்லாம் முன்பு, கிருஸ்துமதத்தார், புனித கர்த்தா ஒருவரை உண்டு செய்து, அவர் விருப்பத்தால் உண்டாக்கியும், காப்பாற்றியும், அழிக்கிறார் என்ற கொள்கையைப் புகுத்திவிட்டனர். இந்த உலகம் அவருடைய நாடக மேடை என்றும், மக்கள் எல்லோரும் அவருடைய கைப்பாவை யென்றும் நம்பச் செய்தனர். மக்களை யெல்லாம் தேவையாலும், விருப்பங்களாலும், பசியாலும், ஆவலினாலும், நம்பிக்கையாலும், பயத்தினாலும், அன்பாலும், வெறுப்பினாலும் நிறைத்து விட்டாராம். அவர் வசந்தத்தைத் தருவாராம். இழையை அறுத்தும், கொக்

புளுகு மூட்டை.

# பிரம்மா.

★

“பிரம்மன் எழுத்தினால் ஜெகமதே நடந்தாகும் மாற்றிடலாகாதே” என்று பிச்சைக்காரனொருவன் பாடிக்கொண்டே வீதி வழியாகச் சென்றான். குரல் கொஞ்சம் இனிமையாக இருந்ததால் கவனித்தேன். ஆனால் அந்தக் கருத்து......? தான் சோம்பேறியாகவே, உழைக்காமல் உல்லாச வாழ்வு வாழ்ந்து வருவதற்கு இது ஒரு சமாதானமென்றே எனக்குப் பட்டது. ‘அயன் எழுதியதை அழித்தெழுத யாராலாகும்’ என்று பாட்டி கூடச் சொல்வதுண்டு. யார் இந்த அயன்? இவன் எங்கே எழுதியிருக்கிறான்? ஏன் அதை மாற்ற முடியாது? —என்று இப்படியாகச் சிந்தனை அலைகள் ஒன்றன்பின் மற்றொன்றாய் என் மனத்திடையே தோன்ற ஆரம்பித்தன......

அடேயப்பா! இது என்ன விசித்திரப் பறவி; நான்குமுகம், நாலு கரங்கள், இரண்டு கால்கள், கையில் சுவடிகள்.

“யாரய்யா நீர்? திறந்த வீட்டில்...!”

“தம்பி, நான்தான் பிரமன். நேரே சத்திய லோகத்திலிருந்து வருகிறேன்”.

“அப்படியா, மிக்க மகிழ்ச்சி. என்ன செய்தி?”

“ஒன்றுமில்லை, நீ என்னைப்பற்றி நினைத்தாயல்லவா; அதனால் ஓடோடி வந்தேன்.”

“ஓகோ! எங்கே உமது வாகனமாகிய அன்னம்?”

“அன்னமா? அப்படி ஒன்று எங்காவது பார்த்திருக்கிறாயா? எல்லாம் புளுகு மூட்டைதான்.........அதைப் பற்றயெல்லாம் உன்னிடம் சற்று நேரம் நிம்மதியாகப் பேசிச்செல்லலாம் என்றுதான் இப்போது எழுந்தருளினேன்.

படத்தில் பார்த்திருப்பாயே; என் தந்தை மகாவிஷ்ணு ஆதிசேஷன் மேல் ஆனந்தமாகச் சயனித்திருப்பார்; காலடியில் லட்சுமி தேவி அமர்ந்து புன்னகையுடன் விளங்குவாள்; மாயோன் கொப்பூழில் மலர்ந்துள்ள ஒரு தாமரைப் பூவின் மீது நான் இருப்பேன்; இப்படித்தான் நான் பிறந்தேனாம். பிறந்தவுடன் படைப்புத்தொழிலை என் தலையில் சுமத்தி விட்டார்கள். அப்பப்பா! என்ன தொந்தரவு தெரியுமா, இந்த இலாகாவில். ஒன்றையாவது ஒழுங்காகப் படைக்க முடிவதில்லை. நான் முடிச்சுப் போட்டு விடுவதும் இப்படித்தான் பொருத்தமில்லாதிருக்கும். ஒருவன் பரம தரித்திரனாயிருப்பான்; ஆனால் அல்லும் பகலும் பாடுபடுவான், அரைவயிற்றுக் கஞ்சியுமின்றி. இவன் உழைப்பை உறிஞ்சி உல்லாச புரியில் உலவுவான் மற்றொருவன் கோடீஸ்வரனாக. அழகனுக்குக் குரூபி மனைவியாவாள். அழகிக்கு அலங்கோல புருஷன் அமைவான், நாலு வர்ணங்களை உண்டாக்கி, அவைகளுக்குத் தனித்தனி ஆசாரங்களையும் ஏற்படுத்தி, இவைகளுக்குப் பிராமணர்களையே குருக்களாக்கி, நாலு வேதங்களையும் எழுதி வைத்து, மக்களுக்குத் தம் தோள் உழைப்பிலே நம்பிக்கையின்றி, எல்லாம் விதி என்ற மூடநம்பிக்கையிலாழ்த்தி—இவ்வளவும்செய்ய வேண்டியதாயிற்று பிராமணர்களுக்காக.”

“ஆமாம். பிராமணர்கள் உன் முகத்திலும், க்ஷத்திரியர்கள் தோளிலும் வைசியர் தொடையிலும், சூத்திரர்களென்றழைக்கப்படும் நாங்கள் உன் பாதத்திலும் பிறந்ததாகக் கூறுகிறார்களே—அப்படியானால் நீ பெண்ணா, ஆணா? உனக்கு எத்தனை இடத்தில் “குறிகள்” உண்டு?”

“அடே, ஏனப்பா அந்தச் சனியனை வேறு நினைவுபடுத்துகிறாய்? நான் ஆண்தான். ஆனாலும் என்ன சுகத்தைக் கண்டேன். வேத கர்த்தாவாயிற்றே என்று தன் திருமணத்தை நடத்திவைக்க என்னை அழைத்திருந்தான் பரமசிவன். ஆஹாகா! அவன் மனைவிதான் என்ன அழகு! அவளை மணவறையில் கண்டதும் அப்படியே சொக்கிப்போய்விட்டேன். அவளும் கீழ்க்கண்ணால் என்னைக் கவனித்துச் சாடை செய்தாள். என் உடலெல்லாம் புளகாங்கித மடைந்தது. அத்துடனில்லாமல் பார்வதி மணவறையைச் சுற்றிவரும்பொழுது எனக்குமட்டும் தெரியும்படியாகத் தன் புடவையை விலக்கியதும்.....சே, சே! நான் சுய உணர்வற்றுப்போனேன். திடீரென்று தாங்கமுடியாத தாபத்தால் இந்திரிய ஸ்கலிதமாகிவிடவே, அருகிலிருந்த எவரும் காணுமுன்னர் பக்கத்திலிருந்த கும்பத்தில்விட்டேன். அப்போதுதான அகத்தியன் பிறந்தான். அவனுக்கு ஒரு மகிமை கற்பிக்கவே அவன்தான் தமிழுக்குக் கர்த்தா என்று விளம்பரப்படுத்தினேன்.

பார்வதிக்குக் கலியாணம் நடந்து அவளும் கணவன் வீடாகிய கைலாசத்துக்கு வந்துவிட்டாள். ஆனாலும் அவளுக்குத் தன் சொந்தக் கணவன் மீது துளிகூட இச்சையில்லை என்பதையறிந்து நான் ஒருசமயம் கைலைக்குச் சென்றேன். சிவன் எங்கோ சென்றிருந்தான். அடடா! அப்போது பார்வதி எனக்களித்த இன்பம்!! இப்போது நினைத்தாலும் உடலெல்லாம் புல்லரிக்கிறது......

எங்கோ கிடந்த சிவன் திடுமென வந்தான். கடுமையான கோபம் அவனுக்கு. பார்வதியும் என்னை வஞ்சித்தாள். தான் சோரம்போனதற்குக் காரணம் எனக்கு அய்ந்து தலைகள் இருந்ததுதான் என்று உண்மைபோல் கூறிவிட்டாள். அதன் பயனாய் என் தலையில் ஒன்றைப் பறிகொடுத்தேன். அவமானம் தாளமுடியாமல் வெளிச் சென்றேன். பிறகு என்முழுச்சக்தியையும் பிரயோகித்து ஓரழகிய பெண்ணைப் படைத்தேன். இவள்எழிற்பிம்பமாய் இலங்கினாள். எனினும் என் மனைவியாயிருக்க இவள் எளிதில் இணங்கவில்லை. புறப்பட்டு ஓடியே போய் விட்டாள். ‘நான் தங்கள் மகளல்லவா’ என்று கெஞ்சினாள். நான் விடுவேனா? பரவாயில்லை. நெறியேது காமியர்க்கு... அன்றியும் நம் குலத்துக்கு இந்த வரம்புமுறைகளே கிடையாது என்று பலாத்காரம் செய்தேன். சகல கலைகளுக்கும் அவளே தெய்வமென்று பதவியளித்தேன். பதவிமோகம் சாமானியமானதா? கடைசியில் சரஸ்வதி பணிந்தாள். என் காமக்கருவியுமானாள் இந்தக் கலாவாணி...”

“அடபாவி! பெற்ற மகளை........ இவளை வணங்குவதால்தான் எங்கள் நாட்டில் பத்துக்கு ஒருவன்கூடக் கல்வியின்றிக் காட்டுமிராண்டியாயிருக்கிறான். யோக்கியன் இவளைப் போற்றுவானா? திருட்டுக் கணக்கெழுதுகிறவன், பொய்யே முதலாக வியாபாரம் செய்பவன், பகற்கொள்ளைக்காரன் முதலியோர்தாம் இவளுக்குப் பூஜை நடத்துகின்றனர். இந்த ஆபாசத்துக்காகத்தான் உங்கள் இருவருக்கும் பூமியில் கோயிலே இல்லை!”

“ஏன் இல்லை? எனக்குக் கும்பகோணத்திலும், சரஸ்வதிக்கு கூத்தனூரிலும் கோயிலில்லையா?”

“நல்ல வேளை. ஒரே ஊரோடு

---

கியை மாட்டியும், பொறியைவைத்தும், குழியை வெட்டியும் தன் வேலையைச் செய்வாராம்.

இந்த நாடகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

விட்டதே சனியன்.''

"மேலும் கேள் தம்பி, என் சோகச் சித்திரத்தை. பரமசிவனுக்குத் துஷ்டப் பிள்ளையாகப் பிறந்தான் கந்தன். இவனை என்னிடம் கல்விகற்க அனுப்பினார்கள். இவனோ அடிப்படையிலேயே கைவைக்கத் தொடங்கிவிட்டான். என்னைப் பிடித்துச் சிறையில் போட்டுவிட்டு என் மனைவி சரஸ்வதியுடன் சரசமாடிக் கொண்டிருந்தான் சிலகாலம். பிறகு பார்வதி—பரமசிவன் சிபார்சினால் விடுதலை பெற்று வெளி வந்தேன். அன்று முதல் சரசுவதியை அரைக்கணமும் பிரிவதில்லை. சதா 'சரஸ்வதி சரஸ்வதி' என்று அழைத்துக் கொண்டேயிருப்பேன். இதைக் கேட்ட குறும்புக்காரர் சிலர் நான் சரஸ்வதியை நாக்கில் வைத்துக் கொண்டுள்ளதாகவும், அவள் அங்கேயே மல, ஜலங் கழிப்பதாகவும் கதை கட்டிவிட்டனர்.

என் மகன் நாரதன் பொல்லாத குறும்புக்காரனாகி விட்டான். ஊரெல்லாம் அவனுக்குக் கலகக்காரன் என்று பெயர். அவனும் சும்மாயிருப்பதில்லை. யாரையாவது 'சிண்டு முடிந்துவிட்டு' வேடிக்கை பார்ப்பதில் வெகு விருப்பம் அவனுக்கு. இவனிடம் என் தந்தையான திருமால் ஏதோ விளையாடிவிட்டார். இவனைப் பெண்ணாக்கிப் புணர்ந்து அறுபது குழந்தைகளும் பிறக்கும்படி செய்து விட்டார். ஊரே சிரிப்பாய்ச் சிரித்தது...''

"அறுபது குழந்தைகளா? அடேயப்பா!''

"ஆமாம். இன்று நீங்கள் தமிழ் வருஷங்கள் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் பிரபவ, விபவ, சுக்கில என்பவையாகிய அறுபதும்கிருஷ்ணனுக்கும் நாரதனுக்கும் பிறந்த குழந்தைகளின் பெயர்கள் தான்.''

''அட வெட்கக்கேடே!''

"இதெல்லாம் வெட்கப்பட்டிருந்தால் நீ ஏன் தம்பி இன்னும் சூத்திரப் பட்டத்துடன் உலவுகிறாய். கேள்... நாரதன் பழி வாங்கத்திட்டம் போட்டு, அநசூயை என்ற ரிஷிபத்தினியின் அழகைப்பற்றி அபாரமாய் வருணித்து விட்டான் விஷ்ணுவிடம். அவர், துணைக்குச் சிவபெருமானையும் என்னையும் அழைத்தார். மூவரும் போனோம், அநசூயையிடம், பிச்சைக்காரர் வேடத்தில். உண்மையிலேயே அவள் அழகின் அவதாரமாயிருக்கக் கண்டு மோகமீறி, நிர்வாணமாய் வந்து பிச்சையிட்டால் தான் ஏற்றுக்கொள்ள இயலுமென, அவளிடம் கூறினோம். எங்களது உண்மை நிலையை எப்படியோ உணர்ந்து கொண்ட அவள், எங்கள் மூவரையும் குழந்தைகளாகமாற்றி விட்டாள்.''

இச்செய்தியைக் கேள்விப்பட்டு எங்கள் பத்தினிமார் மூவரும் வந்து வெகு சிரமப்பட்டு கடைசியில்நாங்கள் தப்பிக்கப்பட்டபாடு, அப்பாடா...! உலகமே சிரித்தது.

அன்று முதல் பெண்களையே தீண்டுவதில்லையென சங்கற்பம் செய்து கொண்டேன். செயற்கை முறையைக் கையாண்டு, காமவேட்கையே உண்டாகா வண்ணமும் தடுத்துக்கொண்டேன்......''

"இந்த முறையை எங்கள் நாட்டுப் பண்டார சந்நிதிகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் எங்கள் பெண்களாவது நிம்மதியாய் வாழ்வார்களே.''

"அவர்களுக்கேன் இந்த முறை இனிமேல்''

"என்ன அப்படிச் சொல்கிறீர்?''

"அவர்கள்தான் 'கூண்டோடு கைலாசம்' போகும் நாள் நெருங்கி விட்டதே, இனி எதற்கு இந்த இழவெல்லாம், என்கிறேன்.

"ஓகோ! உன்னைமட்டும் விட்டுவிடுவோமா! நான்கு வருணம், நான்கு வேதம், நான்முகன் படைப்பு இவைகளுக்கெல்லாம் புதைகுழி வெட்டியாகி விட்டது எங்கள் நாட்டில்! வள்ளுவன் வகுத்த நெறியில் வாழ்வு தொடங்கிவிட்டோம். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்ற வாக்கின்படி முதலில் உங்கள் தேவர் குழாத்தை ஒழித்துவிட்டுத்தான் பிறகு ஆக்கவேலை! அயன் படைப்பை மாற்றி அமைக்கவில்லையா லெனின். அதே முறையில் இங்கேயும் செய்ய முடியும் பெரியார் என்றொருவர் தோன்றியுள்ளதால். இனி உங்கள் கீதையும் வேதமும் வந்த பாதை பார்த்து ஓட வேண்டியதுதான்......''

"தம்பி! உங்களுக்கேன் அவ்வளவு சிரமம். நாங்களே எங்கள் கடையைக் கட்டிக் கொள்ளுகிறோம்''

"சரி. ஓடிவிடும் சீக்கிரம்! என் தம்பி—சிறுவன்—இங்கே உம்மைக் கண்டால் தொலைத்துவிடுவான்! போம்! போம்!!''

* *

"என்னடா இது! தூங்கும்பொழுதெல்லாம் கனாக்கள்தான் உளறுவதே உனக்கு வேலையாய்ப்போய்விட்டது'' என்று எழுப்பினார்கள் என்தாயார். பதில் சொல்ல முயன்றேன்; முடியவில்லை. குரல் கம்மிப்போயிருந்தது.

[''பெருச்சாளி'']

---

## பிறப்பு.

ஈரோடு கருங்கல்பாளையம் தோழர் ஈ. ஏ. கிருட்டினன் வாழ்க்கைத் துணைவி தோழியர் வெற்றிச் செல்விக்கு 9-4-49 தேதி ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம்.

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக முடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனா சக்தி என்றும் கருதுகிறார்கள். சிறுவனாயிருக்கும் பொழுது நாமும் அப்படியே கருதியிருந்தோம். இப்போது அறிவு வளர்ச்சி பெற்றபின் அந்த ஜாலவேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும் அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியாவிட்டாலும்கூட நாம் அவற்றை ஒரு காலமும் மந்திரசக்தி என்றோ, தெய்வ சக்தி என்றோ சொல்லாமல் "இது ஏதோ தந்திரம்தானே ஒழிய வேறில்லை; ஆனால் அது இன்னது என்று கண்டுபிடிக்க நம்மால் முடியவில்லை'' என்று சொல்லி விடுகிறோம். எனவே ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும், தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியின் பலனுமேயாகும். அதுபோலவே நமக்கு இப்போது தெய்வ சக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல்நாட்டாருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டுபிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி, அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து, அத்தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட கருத்தாகும். இப்போது வானசாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன் இவற்றின் இயங்குதல், அதன் கால அளவு ஆகியவை

களைக் கண்டுபிடித்தபின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம். அதுபோலவே எங்கிருந்து எப்படி மழைத் தண்ணீர் வருகின்றதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும் வருண பகவானும் சிறிது சிறிதாக நம்மனதைவிட்டு மறையத் தொடங்கிவிட்டன. அதுபோலவே வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூற்று ஆராய்ச்சியும் நமக்குத் தெரிய வந்த பின்பு பேதி, மாரி, அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே காற்று, கருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்து வருகின்றன. துப்பாக்கி பீரங்கி முதலிய ஆயுதங்கள் கண்டுபிடித்தபின் யானை, புலி, சிங்கம் முதலிய தெய்வங்களைப் பற்றிய பயமும் மறைய ஆரம்பித்துவிட்டன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமேயானால், காரண காரியம், ஆதாரம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்கு நாள் மனிதன் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்து கொண்டேதான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள், மற்றொருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

**ஏன் இருக்கிறது?**

இப்போதுள்ள நம் மனதிற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும், அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியம் பெற்றுவிட்டோமென்றாலும், நமக்குப் பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும்வரை கடவுள் உணர்ச்சி எளிதில் விட்டுவிலக முடியாது. அன்றியும் வாழ்க்கையில் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி சிறிது காலம்வரை இருந்தே தீரவேண்டியதாயிருக்கின்றது. அதாவது கஷ்டப்பட்டு ஏமாற்றமடைந்தவனுக்கும், ஈடு செய்யமுடியாத நஷ்டமடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லித்தான் ஆறுதலையும், திருப்தியையும் அடையச் செய்யவேண்டியிருக்கின்றது. நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்குக் காரண காரியம் எட்டாத இடத்திலும், ஈடு செய்யமுடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக் கொண்டுதான் திருப்தி அடைகின்றார்கள். அப்போது தங்கள் அறிவுக்குமேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உறுதியான பக்குவமடைந்தவர்கள், எந்த விஷயத்திலும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக் கொண்டு சமாதானமடைவதும், தெரியாததாயிருந்தால் நமக்குத் தெரியவில்லை என்றோ, அல்லது இதுதான் இயற்கை என்றோ கருதித் திருப்தியடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே சாதாரண மக்களின் கடவுளுக்கும் சற்று அறிவுடைய மக்களின் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்களின் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திற்கும் வித்தியாசங்களுண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும், கடவுள் [illegible] பொறுப்பிலும் வித்தியாசங்களுண்டு. (தொடரும்)

---

## கலப்பு மணம்

மாயவரம் 11-4-49.

இவ்வூர் பிரபல ஜவுளி வியாபாரி திரு பக்கிரிசாமி செட்டியார் சகோதரரும் முனிசிபல் வைஸ் சேர்மன் திரு முத்தையஞ் செட்டியார் மைத்துனருமான தோழர் மயூரநாதன் ([illegible] சைவ செட்டி வகுப்பு) இவ்வூர் சர்க்கார் ஆஸ்பத்திரி நர்ஸ் தோழியர் ஹாலிஸ் பிரான்சிஸ் (ரோமன் கத்தோலிக் கிருத்துவ மதம்) அவர்களை, 1-4-49-ல் சென்னையில் பதிவு திருமணம் செய்துகொண்டார். [அன்பளிப்பு ரூ. 1-ம் வரப்பெற்றோம் ஆ-ர்]

---

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி தமிழன் அச்சகம். 59, கச்சேரி வீதி, ஈரோடு.

## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறை பாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | 0 | 5 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க் கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத் திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 5-ரூபாய்க்கு உட்பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்டருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலிலேயே அனுப்பி விடவேண்டும். 5-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால், காலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண்டும். இப்படி முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு.